விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 26 செவ்வாய்க்கிழமை (10.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 204

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நான் இன்னும் சிறைக் கைதியே!

### பொன்சேகா புலம்பல்

பொது மக்களுக்கு தெரியும் வகையில் என்னை விடுதலை செய்துள்ளார்கள். இருப்பினும் என்னுடைய ஜனநாயக உரிமைகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. அந்த வகையில் நான் இன்னமும் சிறைக் கைதியாகவே உள்ளேன் என்று முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் இருந்த போது அரசியலில் ஈடுபட்டார் என்று பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதாக வலியுறுத்தி நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்த சரத் பொன்சேகா, அதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நான் (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு-மு.காங்கிரஸ் இணைந்து போட்டியிடுமா?

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருந்து விலகி, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் வாய்ப்பில்லை என முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் அரசியல் விமர்சகருமான எஸ்.எல். எம். ஹனீபா பி.பி.சி தமிழோசைக்கு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் போட்டியிட்டால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயினும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தற்போது வகித்து வரும் அமைச்சர் பதவிகளையோ அல்லது ஏனைய வசதிகளையோ துறப்பதற்கும் முன்வரமாட்டார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த விரும்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளமை தொடர்பில் பி.பி.சி. தமிழோசைக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

# இறுதிப்போரில் கொல்லப்பட்டோர் 8 ஆயிரத்திற்கும் குறைவாம்!



## இது கோத்தாவின் கணக்கு

(தியத்தலாவ), இலங்கைக்கான ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கையில் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் இது பொய் எனவும், சுய லாபங்களுக்காகவே இவ்வாறு மிகைப்படுத்தி வெளியிடப்பட்டது எனவும் குற்றம் சாட்டியுள்ள பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, உண்மையில் இறுதிக்கட்டப் போரில் இறந்தவர்கள் 8 ஆயிரத்திற்கும் குறைவு எனத் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## காட்டுப்பூச்சி கடித்தாலும் இலங்கைக்கு செல்வேன்!



காட்டுப் பூச்சி கடித்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இந்தியாவின் கிராமிய அபிவிருத்தி இணை அமைச்சர் ஜெய்ராம் ரமேஸ் நாளை கொழும்புக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## 59 இராஜதந்திரிகள் மட்டக்களப்பு விஜயம்

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 59 இராஜதந்திரிகள் நேற்று திங்கட்கிழமை மாலை மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகருக்கு விஜயம் செய்த இராஜதந்திரிகளை மட்டு. பொது நூலகத்திற்கு முன்னால் மாவட்ட செயலாளர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் துண்டுப் பிரசுரம்

யாழ்.வடமராட்சிப் பிரதேசத்தில் நெல்லியடி நகரப் பகுதியில் தமிழீழ எல்லாளன் படை தமிழீழம் என்ற பேரில் இனந் தெரியாத நபர்களினால் துண்டுப் பிரசுரங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீசப்பட்டுள்ளன என இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் வெளியிடப்பட்ட அந்த துண்டுப் பிரசுரத்தில்,

நடந்து முடிந்த வன்னி யுத்த அவலத்தின் பின் சிங்கள பேரினவாத அரசும் அதன் அடிவருடிகளும் எம் இனத்தின் மீது மிகப் பெரிய உளவியல் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நிலைவரங்கள் குறித்த சந்திப்புகளில் பிரிட்டிஷ் குழு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரிட்டிஷ் நாட்டின் உயர் ஸ்தானிகர் ஜோன் ரன்கின் யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன் சந்திப்பினை மேற்கொண்டுள்ளார் என யாழ். பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் ஊடகப் பேச்சாளர் மேஜர் மல்வராச்சி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட இலங்கைக்கான பிரிட்டிஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின், பலாலி படைத்தலைமையகத்தில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை கட்டளைத் தளபதியுடன் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்திற்கு (20ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையில் தினமும் நான்கு பேர் கடத்தல்

### கடந்த வருடம் 15 ஆயிரம் பேர்

(கொழும்பு)

இலங்கையில் தினமும் சுமார் நான்கு பேர் கடத்தப்படுவதாக பொலிஸாரின் அறிக்கை ஒன்று வெளிப்படுத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொலிஸாரின் இவ்வறிக்கையின்படி கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 650 பேர் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்வறிக்கை தொடர்பாக குறிப்பிட்ட ஆங்கில ஊடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் வெள்ளை வான் கடத்தல் போன்ற சம்பவங்கள் சர்வசாதாரணமாக இடம்பெற்று வருகின்றது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடத்தல் சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றது. படைத் தரப்பினரைப் போன்றே துணை ஆயுதக் குழுக்களும் ஆள் கடத்தலில் நேரடியாக ஈடுபடுகின்றன.

இலங்கையில் கடந்த வருடத்தில் மட்டும் 15 ஆயிரம் பேர் (20ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த அரசின் பயணம் நீண்ட நாளுக்கு இல்லை

### ஐ.தே.க. நம்பிக்கை

மகிந்த அரசு இனியும் நீண்ட காலங்களுக்கு தமது பயணத்தை தொடர முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் ஊடக பேச்சாளர் கஜந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றிய அவர், அரசின் செயற்பாடுகள் நாட்டு மக்களை இக்கட்டான சூழ்நிலைக்கு உட்படுத்தியிருப்பதாக கூறினார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

மக்களுக்கு நியாயத்தை வழங்கும் சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தம்பிக்க செய்து நிஜமான பொதுமக்களின் கருத்துக் கணிப்பை பெறும் வாய்ப்புக்கு இடமளிக்காமலும் அரசு செயற்படுகிறது.

மாகாண சபை தேர்தல்களை பகுதி பகுதியாக அரசாங்கம் நடத்தி வருகிறது. சில மாகாண சபைகள் அவற்றின் ஆயுள் காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டன. இதன் காரணமாக பொதுமக்களின் கோடிக் கணக்கான நிதி (20ஆம் பக்கம் பார்க்க)

# விவாகரத்துக் கோரி சனத் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சனத் ஜயசூரிய தனது மனைவியிடமிருந்து விவாகரத்து அளிக்குமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் நடிகருமான ஜயசூரிய, தனது மனைவியான சன்ட்ரா டானியாவ் டி சில்வாவிடமிருந்து விவாகரத்து கோரியே தனது சட்டத்தரணி ஊடாக கொழும்பு நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தனது மனைவி உரிய முறையில் தம்மைக் கவனிப்பதில்லை என சனத் ஜயசூரிய நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சனத் ஜெயசூரியவிற்கும் அவரது மனைவி சன்ராவிற்கும் மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். அத்து டன்அவரது மனைவி முன்னாள் விமானப் பணிப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை சனத் ஜெயசூரிய பிரபல இந்தியத் தொலைக்காட்சி ஒன்றின் நடனப் போட்டித் தொடர் ஒன்றில் பங்கேற்று வருகிறார். (ந-8,11)



இலங்கைக்கான பிரிட்டிஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை நேற்று மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது...

# ஐ.நாவுக்கு படையை அனுப்பியதில் இலங்கைக்கு நல்ல வருமானமாம்

## புள்ளிவிபரம் காட்டுகிறார் ருவான்

(கொழும்பு)

ஐ.நா. அமைதிகாக்கும் படைக்கு, தமது படையினரை அனுப்பியதன் மூலம் இலங்கை அரசாங்கம் இதுவரை 18.4 பில்லியன் ரூபாயை வருமானமாகப் பெற்றுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரூவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படைக்கு இலங்கை படையினரை அனுப்பி வருகிறது. தற்போது 1200 இலங்கைப் படையினர் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஐ.நா. சார்பில் அமைதி காப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஹெய்ட்டியில் 1000 பேரும் லெபனானில் 200 பேரும் அமைதி காப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைப் படையினருக்கு ஐ.நா. மூலம் 12.3 பில்லியன் ரூபாய் சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது.

இது நேரடியாகவே படையினருக்கு வழங்கப்படுகிறது. இந்நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு 5.9 பில்லியன் ரூபாயும் வருமானமாகக் கிடைத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 8 ஆபிரிக்க நாடுகளில் ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பாளர்களாக இலங்கைப் படையினர் பணியாற்றுகின்றனர் எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ந-8,11)

# புதிய கற்கைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் தேடுபவர்களுக்கான தொடர்பாடலில் ஆங்கிலம் (6 மாதம்) ஆகிய கற்கை நெறிகள் யூலை மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட இருப்பதனால் தங்களுடைய பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்படி கற்கை நெறிகளை தொடர்வதற்கான வயதெல்லை 17-25. இக்கற்கை நெறிகளானது முற்றிலும் இலவசமானதுடன் மாணவர்களுக்கான உதவிப்பணத் தொகை வழங்குதல் மற்றும் தூரதேச மாணவர்களுக்கு பருவகாலச்சீட்டும் கற்கை நெறியின் இறுதியில் வேலையின் போதான 6 மாதகால தொழிற்பயிற்சியும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, பிறவுண் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது 021 222 0028 எனும் தொலைபேசி இலக்க மூலமாகவோ தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என பணிப்பாளர் யோகராஜன் அறிவித்துள்ளார். (ந-8)

# யாழ்.போதனாவின் புதிய விடுதியை யப்பான் தூதுவர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வரும் விடுதிக்கட்டிடத் தொகுதியை இலங்கைக்கான யப்பான் நாட்டின் தூதுவர் நொபுகிட்டோ கோபோ உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான யப்பான் நாட்டுத்தூதுவர் மற்றும் யப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவினர் முன்னதாக புத்தூர் கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்ற சிறியரக உழவு இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வில் பங்கு கொண்டனர்.

இதன்பின்பு பிற்பகல் 2 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட இந்தக் குழுவினர் யப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுவரும் விடுதிக்கட்டிடத் தொகுதியை பார்வையிட்டனர்.

அத்தோடு வைத்தியசாலையின் அதிகாரிகளுடனும் அவர்கள் கலந்துரையாடியுள்ளனர். ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுவரும் மேற்படி விடுதிக்கட்டிடத் தொகுதி எதிர்வரும் நவம்பர் மாத முற்பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை-யப்பான் நட்புறவாக ஜெய்க்கா நிறுவனத்தினால் இந்த விடுதிக் கட்டிடத்தொகுதி அமைக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-4,6)

# வீட்டை உடைத்து திருடியவருக்கு ஒருவருட சிறைத்தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டினை உடைத்து திருடியவருக்கு யாழ். நீதிமன்று ஒருவருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த வருடம் மார்கழி மாதம் 15ஆம் திகதியன்று தாவடி கிழக்கு கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றின் அறையினை உடைத்து 2 இலட்சத்து 84 ஆயிரம் பெறுமதியான மின் தொழில் சார் உபகரணங்கள் திருடப்பட்டன.

இத்திருட்டினை மேற்கொண்டவர் என குற்றம்சாட்டப்பட்ட அம்மன் வீதி கொக்குவிலினைச் சேர்ந்த நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் எனினும் குறித்த நபரினை பிணையெடுக்க யாரும் முன்வராத காரணத்தினால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் குறித்தவழக்கு விசாரணைக்காக நேற்று யாழ்.நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த சந்தேக நபர் குற்றத்தினை ஒப்புக்கொண்டமையால் ஒருவருட சிறைத் தண்டனையை விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

குறித்த நபரால் திருடப்பட்ட மின் தொழில் சார் உபகரணங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-4)

ஓராண்டு நினைவஞ்சலி 10.07.2012



தோற்றம் 16.12.1974

மறைவு 21.06.2011

**அமரர் இரத்தினசிங்கம் பிரபாகரன்**

(முன்னாள் சேவாலங்கா உத்தியோகத்தர்)

பாசத்தின் ஒளிவிளக்கே
பண்பின் திருவிளக்கே - எங்கள்
குடும்பத்தின் குலவிளக்கே - உம்பிரிவால்
குமுறுதையா எம்மனம் இங்கே
ஆறாத்துயருடன் உங்கள்
ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(ந-447)

உங்கள் நினைவுடன்
மனைவி: பி. உமாராணி
மகன்: பி. நிகேதன், மகன்: பி. மிதுசிகன்

இல. 140, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

# வைத்தியர்களின் போராட்டத்தை அனுமதிப்பதா? தடைசெய்வதா?

## யாழ்.நீதிமன்றில் இன்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தினை தடை செய்வதா? அல்லது அனுமதிப்பதா? என்பது தொடர்பாக இன்று யாழ்.நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

புற்றுநோய் வைத்திய நிபுணர் ஜெயக்குமாரின் வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியும், அச்சம்பவத்தின் சூத்திரதாரிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படாததோடு, யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பிலான முறைசார் நடவடிக்கைகளினை எடுப்பதில் ஏற்படும் காலதாமதம் என்பவற்றினை கண்டித்தும் இவற்றிற்கான தீர்ப்பினை விரைவில் வழங்கக்கோரியும் கடந்த வெள்ளிக்கிழமையன்று யாழ்.போதனா வைத்தியசாலை ஒரு பகுதி வைத்தியர்கள் அரை நேர அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அறிவித்திருந்தனர்.

எனினும் இப்பணிப்புறக்கணிப்பும், தொழிற்சங்க நடவடிக்கையும் சட்ட விரோதமானவை எனவும் அதனை இடைநிறுத்தக் கோரியும் யாழ்.பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேரா நீதிமன்றுக்கு அறிக்கையொன்றினை சமர்ப்பித்திருந்தார்.

இதற்கமைய அவ்வறிக்கையினை பரிசீலித்த யாழ்.நீதவான் மா.கணேசராஜா. நோயாளர்களின் நலனை கருத்திற் கொண்டு வைத்தியர்களின் பணிப்புறக் கணிப்பினை தடை செய்வதாக தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

யாழ்.நீதிமன்றினால் தமது பணிப்புறக்கணிப்பு தடை செய்யப்பட்டதனை அறிந்த் யாழ்.மருத்துவர் சங்கத்தினர் அத் தடையினை மீள் பரிசீலனை செய்யக்கோரி மன்றுக்கு விண்ணப்பித்துள்ளனர். இந்நிலையில் குறித்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு இன்று யாழ்.நீதிமன்றத்தில் வழங்கப்படவுள்ளது. (ந-4)

# இன்று ஒரு தகவல்

## தவறும் தண்டனையும்

ஒருநாள் இராமர் அரச சபையில் உட்கார்ந்திருந்தார். இராம ராஜ்யம் நடந்து கொண்டிருந்த நேரம் அது. அந்தச் சமயத்திலே ஒருநாய் அரச சபைக்கு வந்தது. அது தலையிலே அடிபட்டு இரத்தம்... அந்தக் கோலத்திலே அது அங்கே வந்ததை ஆச்சரியமாக பார்த்தார்கள். இராமரும் அந்த நாயைப் பார்த்தார்.

"நீ இங்கே வந்த காரியம் என்ன? என்ன நடந்தது? எதுவாக இருந்தாலும் அச்சப்படாமல் சொல்" என்றார்.

உடனே அந்த நாய் மெதுவாக சொல்ல ஆரம்பித்தது;

''ஐயா... நான் தெருவிலே போய்க்கொண்டிருந்தேன். வழியிலே ஒருவர் வந்தார்... அவர் வேத சாஸ்திரம் படித்த பெரியவர்... அவர் எந்தக் காரணமும் காரியமும் இல்லாமல் தன் கையிலே வைத்திருந்த குச்சியினால் என் தலையிலே அடித்து விட்டார். அதுதான் தலையிலே இரத்தம் வடிகிறது... இதை நீங்கள் விசாரித்து தகுந்த தீர்ப்பு வழங்க வேண்டும்" என்று நாய் சொல்லியது.

இராமர் பார்த்தார். உடனே தன்னுடைய காவலர்களை அனுப்பினார். "அந்த நபரை... எங்கேயிருந்தாலும்... போய்க் கொண்டு வாருங்கள்" என்றார்.

காவலர்கள் போனார்கள். அந்த நபரைக் கண்டுபிடித்து அரண்மனைக்கு கொண்டு வந்தார்கள்.

நடந்தவற்றை விசாரித்தார் இராமர். அதற்கு அந்த நபர்...

"நான் வீதி வழியாக வந்து கொண்டிருந்தேன். குறுக்கே இந்த நாய் வந்தது... நான் அவசரமாகப் போய்க் கொண்டிருந்தேன். அது எனக்கு வழித்தடையாக இருந்தது. எனக்கு கோபம் வந்தது. அதனால் அடித்து விட்டேன். வேத சாஸ்திரம் படித்த நான் என் வசமிழந்து கோபப்பட்டது பெரிய பிழைதான். அதை நான் ஒத்துக் கொள்கிறேன். குற்றத்தை ஏற்றுக் கொள்கிறேன். எனது தண்டனையை வழங்குங்கள் ஏற்றுக் கொள்கிறேன்– என்றார்.

சரி... இப்போது அந்த நபருக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். என்ன தண்டனை கொடுப்பது? யோசித்தார் இராமர்! அதையும் அந்த நாயிடமே கேட்டார்.

''நீயே... சொல்லு... என்ன தண்டனை கொடுக்கலாம் இவருக்கு? என்று...

அதற்கு நாய்... "இவரை ஏதாவது ஒரு கோவிலுக்கு தருமகர்த்தாவாக நியமித்து விடுங்கள். அதுதான் இவருக்குச் சரியான தண்டனை!" அப்படி என்று கூறியது. இதைக் கேட்டதும் இராமர் முகத்திலே புன்னகை. ஆனால், அங்கேயிருந்த மற்றவர்களுக்கு எல்லாம் ஆச்சரியம்"

"அது எப்படி? பிழை செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பது தானே நியாயம்! அதைவிட்டு விட்டு தர்மகர்த்தா பதவியைக் கொடுக்கச் சொல்லுவது எந்த வகையில் நியாயம்?" இந்தச் சந்தேகத்தை அந்த நாயிடமே கேட்டார்கள்; அந்த நாயும் அங்கே இருந்தவர்களுக்கு பதில் சொல்லியது;...

"நான் முற்பிறவியிலே ஒரு கோவிலுக்கு தர்மகர்த்தாவாக இருந்தேன். எவ்வளவோ கவனமாக... எச்சரிக்கையாகத் தான் எனது கடமைகளைச் சரிவர செய்து கொண்டு வந்தேன். அப்படியே இருந்தாலும், சில சமயங்களில் என்னையும் மீறி கோயில் செல்வத்தை நான் அனுபவிக்கிறதற்கு காரணமாகி விட்டேன். ஒரு கோவிலுக்குத் தர்மகர்த்தாவாக இருக்கிறவர் எப்படியும் இந்தப் பாவத்தில் இருந்து மீள்வது கஷ்டம்! அதனால் தான் இந்தப் பிறவியிலே நாயாகப் பிறந்து இப்படிக் கஷ்டப்படுகிறேன். இதே நிலைமை இவருக்கும் வர வேண்டும். அதனால் தான் இப்படி ஒரு தண்டனையை வழங்குமாறு கேட்டுக் கொண்டேன்" என்றது நாய்.

இதிலே இருந்து, என்ன தெரிகிறது?...

எந்தப் பதவியிலே நாம் இருந்தாலும்... நமக்குத் தெரியாமல் கூட அதை தவறாக உபயோகப்படுத்தக்கூடாது என்பதை இதிலேயிருந்து புரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால், அடுத்த பிறவியிலே நாயாகப் பிறந்து எங்கேயாவது போய் வாலை ஆட்டிக் கொண்டு நிற்க வேண்டியதுதான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்தியா தமிழினத்தின் பகை என்பதை உணராத வரை தமிழீழம் சாத்தியமில்லை

## தமிழக இ.மு.பொதுச்செயலாளர் நா.வைகறை

இந்தியம் தமிழினத்தின் பகை என்பதை உணராத வரை தமிழீழம் சாத்தியமில்லை என தமிழக இளைஞர் முன்னணி பொதுச் செயலாளர் நா.வைகறை தெரிவித்துள்ளார்.

முனைவர் த.செயராமன் எழுதிய ஈழம்; இந்தியமும் இனப் படுகொலையும் என்னும் தலைப்பிலான நூல் வெளியீட்டுவிழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழீழ மக்களைக் கொன்றொழித்த இலங்கை அரசுக்கு முட்டுக் கொடுத்துப் போரை வழி நடத்திய இந்தியாவின் பங்கு குறித்து பேசும் கட்டுரைகளை முனைவர் த. செயராமன் தொகுத்துள்ளார்.

ஈழப்போரில் இந்திய அரசு முனைப்புடன் ஈடுபடுவதற்கான காரணங்கள், சிங்கள அரசின் 13 ஆவது சட்டத்திருத்தம் தமிழீழ மக்களுக்கு எவ்வகையில் உரிமைகளை மறுக்கிறது, தேசிய தன்னுரிமை குறித்த அனைத்துலகச் சட்ட விளக்கங்கள், தமிழக மீனவர் சிக்கலுக்கான தீர்வு என பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் இந் நூலில் உள்ளன.

முள்ளிவாய்க்கால் சோகம் தமிழினத்தின் தீராத காயம். தமிழீழ மக்களை அழித்தொழிக்க உதவிய இந்திய அரசு நம் இனத்தின் பகை அரசு. எனவே, இந்தியத்தை நாம் புரிந்து கொள்ளாத வரை தமிழீழ விடுதலையைப் பெற முடியாது.

இத்தனை நடந்த பின்னரும் இந் தியாவை நாம் ஏன் நம்ப வேண்டும்? இந்தியம் தமிழினத்தின் பகை என் பதை உணராத வரை தமிழீழம் சாத்தியமில்லை.

தமிழீழ விடுதலைக்கு முன்பே தமிழ்நாட்டு விடுதலையை நாம் அடைந்து விடுவோம் என்று எண்ணுகிற அளவிற்கு இந்திய அரசு தன் செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டுள்ளது. காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு, சிறுவாணி என தொடர்ந்து தமிழகத்திற்கு ஆற்று நீர் உரிமை மறுக்கப்படுவது, நெய்வேலி மின்சாரத்தை தமிழகத்திற்கு வழங்காமை என தொடர்ந்து இந்திய அரசின் கோர முகம் தமிழகத்தில் அம்பலப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, உலகத் தமிழர்களுக்கு ஒரு நாடு என்றல்ல. தமிழீழம்– தனித்தமிழ்நாடு ஆகிய இரண்டு நாடுகளும் வேண்டும் என அணி திரள வேண்டும் என தனதுரையில் தெரிவித்துள்ளார். (அ–2)

# இராசி பலன்

10.07.2012

(ஆனி 26, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

சப்தமி முன்னிரவு 9.57 மணிவரை

உத்தரட்டாதி மாலை 6.23 மணிவரை

இராகுகாலம் 2.59-4.29 மணிவரை

சுபநேரம் 10.29-11.59 மணிவரை

**மேடம்** பொழுபோக்கு விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படும், ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கையுண்டு, தேக ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சயன சுகக்குறைவான நாள்.

**இடபம்** உற்றார்,உறவினகளின் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும், காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், அரசு வழி அனுகூலமுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொள்கைப்பிடிப்போடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**சிங்கம்** உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**கன்னி** குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்** நன்மைகள் நடைபெறும் நாள், உறவினருடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்,தொழிலில் உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், தொலைபேசி வழித்தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நன்மைகள் நடைபெறும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், தாராளமாகச் செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், இளைய சகோதர வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும்.

**மீனம்** குடும்பத்தில் முற்கோபத்தைக் குறைப்பது நல்லது, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

வளவன்

# அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஏ.எஸ்.பிரகாஸ் அறிவித்துள்ளார்.

சிவராஜன் சத்தியபவானி 687060199V (கணபதியப்புலம், கோப்பாய்), சிருஷ்ணன் விஜயதர்சினி 857300254V (சிதம்புரபுரம், வவுனியா), ஆறுமுகம் திருநாவுக்கரசு 561442010V (மார்க்கப் வீதி, நீர்கொழும்பு), மொணிக்கம்மா ஞானமுத்து 526472675 X (பலாலி 09- 73) ஆகியோரது அடையாள அட்டைகளே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ–9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 120 |
| தக்காளி | 150 | 140 | 110 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 120 | 160 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 50-60 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 80-100 | 110 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 120 | -- | -- |
| பயற்றங்காய் | 60-70 | 40 | 75 | 40 |
| லீக்ஸ் | 140 | 140 | 150 | 150 |
| பீற்றூட் | 80 | 70 | 70 | 90 |
| கறிமிளகாய் | 140 | 120 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 50 | 100 | 80 | 80 |
| போஞ்சி | -- | 100 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 70 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 15 | 10 | 30 | 15 |
| தேசிக்காய் | 90 | 90 | 110 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 30 | 18-20 |

## பழைய மாணவர் சங்க நிர்வாகத்தெரிவு

(கரவெட்டி)

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் தலைவர் செ. செல்வராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக செ. செல்வராஜா, செயலாளராக ம. துவாரகன், உபதலைவர்களாக த. நிஷாந்தினி, செ. அனுஷா, உப செயலாளராக க.ரதீஷன், பொருளாளராக ச. செல்வராஜா, போஷகராக அதிபர் பி. சந்திரபாபு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக ந. சந்திரகுமார், க. பேரானந்தம், து. விஜயகுமார், எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-24)

# புதைக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையின் காணியில் இருந்து சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிள் ஒன்று குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கென அண்மைக்காலத்தில் ஒரு அன்பரினால் அக்காணி வழங்கப்பட்டது. அக்காணியை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் மோட்டார் சைக்கிளின் உதிரிப்பாகம் ஒன்றைக் கண்டனர்.

இதனை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த இடத்தை தோண்டிய போது அது முழுமையான மோட்டார் சைக்கிளாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இம்மோட்டார்சைக்கிள் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளா அல்லது திருடப்பட்ட மோட்டார் சைக்கிளா? என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இச்சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

அன்பரால் வழங்கப்பட்ட காணியை துப்புரவு செய்யும் வேளையிலேயே மோட்டார் சைக்கிள் கண்டெடுக்கப்பட்டது.

இவ்விடயத்திற்கும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் எதுவிதமான தொடர்பும் இல்லை எனவும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உண்மைத்தன்மையை அறிவதில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

## ஸ்ரீதுர்க்காதேவி மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவ பெருவிழா நேற்றைய தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு சப்பரத்திருவிழாவும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று 19 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் பூங்காவனத்திருவிழாவுடன் மஹோற்சவம் நிறைவடையவுள்ளது. (அ-3-29)




# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பஷார்-1 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஆஸ்பத்திரி வீதி சந்தை முன் குடியிருப்பிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை றிம்மக்கோல் மாசால் வீதியிலும் வைத்து வழங்கப்படும்.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை கொட்டடி நமசிவாயம் பாடசாலை முன்பாகவும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கீரிப்பிள்ளையார் நாவலர் வீதியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)

# சுகாதார சீர்கேட்டுடன் நிலாவரைக் கிணறு

## மக்கள் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

வரலாற்று சிறப்புமிக்க நிலாவரைக் கிணறு தற்பொழுது சுகாதார சீர்கேடு மிக்க இடமாக மாறிவருவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற இடமாக விளங்கி வரும் நிலாவரைக்கிணற்றை தினந்தோறும்பல நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் பார்வையிட வந்த வண்ணமே உள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இக்கிணறு தற்பொழுது பராமரிக்க யாருமற்ற நிலையில் காணப்படுகின்றது.

இக்கிணற்றை எதிர்பார்ப்புடன் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாழ். மக்கள் சுகாதார சீர்கேடு காரணமாக இக்கிணற்றின் மகிமை மற்றும் சிறப்புக்களை அறியாமல் பெரும் ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.

நிலாவரைக் கிணற்றை பராமரித்து அழகுபடுத்தவும் கிணற்றின் மகிமையை மும்மொழி எழுத்தின் மூலம் காட்சிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வரவேண்டும் என்று மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# மிருசுவில் பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரிப்பு

(மிருசுவில்)

மிருசுவில் பகுதியில் சட்டவிரோதமான செயற்பாடுகள் அதிகம் இடம்பெறுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதில் மிருசுவில் பாம் பிரதேசத்தில் சில குறிப்பிட்ட வெற்றுக்காணிகளில் மணல் அகழ்வு நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இதனால் இக்காணிகள் பள்ளக்காணிகளாக மாறிவருவதை அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பாக உரிய தரப்பினர் எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்படுகின்றது.

அத்துடன் வடக்கு மிருசுவில், போக்கட்டி போன்ற பகுதிகளில் வீடுகளில் மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றது.

இது தொடர்பாக பல தடவை சுட்டிக் காட்டப்பட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது இச்செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இதனால் சமுதாய சீர்கேடு இடம்பெறுகின்றது. எனவே இச்சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்து நிறுத்த உரிய தரப்பினர் முன்வரவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிகை விடுத்துள்ளனர். (அ-3-85)

# ஆரம்ப சுகாதார மருந்தகத்தை தரமுயர்த்த நடவடிக்கை எடுங்கள்

## பிரதேச மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

கைதடி ஆரம்ப சுகாதார மருந்தகத்தை தரம் உயர்த்துமாறு அப்பிரதேச மக்களும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன்.

ஒரு மருத்துவருடன் ஆளணிப்பற்றாக் குறையுடன் இயங்கிவரும் இந்த மருந்தகத்தை தரம்உயர்த்தி பொதுமக்களுக்கான சேவையை விஸ்தரிக்க சுகாதாரத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கைதடி மத்தியில் அமைந்திருக்கும் இவ் அரச மருந்தகத்தை நாவற்குழி, கோப்பாய் - கைதடி, அரியாலை கிழக்கு மற்றும் இக்கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.


அத்துடன் நவீல்ட் பாடசாலை, கைதடி முதியோர் இல்லம், விழிப்புலனற்றோர் தொழிற்பூங்கா, கைதடியில் உள்ள அரச, தனியார் நிறுவனங்கள் ஆகியன மேற்படி மருந்தகத்தின் சேவையை பயன்படுத்தி வருகின்றனர்.


எனவே போதிய ஆளணி மற்றும் வசதிகள் இன்றி இயங்கிவரும் மேற்படி ஆரம்ப சுகாதார மருந்தகத்தை தரமுயர்த்தி மக்களுக்கான சிறந்த சேவையை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

## உதவிப் பணத்தை பெற்றுக்கொள்ளவும்

(நல்லூர்)


கோப்பாய் பிரதேசத்தில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுபவர்கள் தாங்கள் பணம் பெறும் தபாலகங்களில் ஒவ்வொரு மாதமும் 4 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார். (அ-3-134)





கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் அதிபர் ஏ. சிவசிதம்பரத்தின் மணிவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் விழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ். செல்வதீபன்)



பருத்தித்துறை கிழக்கு தும்பளை புனித மரியாள் முன்பள்ளியின் 8 ஆவது வருட விளையாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை பங்குத் தந்தை ஜே.ஜோண் மவுலிஸ் அடிகளார் உரையாற்றுவதையும் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை கிழக்கு ஜே/ 403 கிராம சேவகர் பி.தயாநிதி வெற்றியீட்டிய மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ஊடக அமைச்சின் பரிந்துரையில் 9 இணையத்தளங்கள் முடக்கம்

(கொழும்பு)

ஊடக அமைச்சின் பரிந்துரைகளுக்கு அமைய ஒன்பது இணையத் தளங்களை இலங்கை தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகம் முடக்கியுள்ளது. தனிப்பட்ட நபர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையில் தகவல்களையும் செய்திகளையும் வெளியிட்டு வந்த இணையத்தளங்களே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. தற்காலிக அடிப்படையில் இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இணையத்தளங்கள் முடக்கப்படவில்லை எனவும் தற்காலிக அடிப்படையில் குறித்த இணையத்தளங்களை முடக்குமாறு இணைய சேவை வழங்குநர்களிடம் கோரியதாகவும் தொலைதொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் யூ.எச்.சீ. பிரியந்த தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சின் இந்த இணையத்தளங்கள் இலங்கையில் முடக்கப்பட்ட போதிலும் வெளிநாடுகளில் பார்வையிடக்கூடிய வசதிகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சில இணையத்தளங்களில் அதன் உரிமையாளர் பெயரோ தொடர்பு கொள்ளக் கூடிய விபரங்களோ கிடையாது என ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# சர்வதேச உளநலம் குறித்த கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் சர்வதேச உளநல தினத்தை அனுஷ்டிப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந் துள்ள வடமாகாண கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு வடமாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் சேவையாற்றும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர்களையும் சிரேஷ்ட ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களையும் கலந்து கொண்டு சர்வதேச உளநல தினத்தினை சிறப்பாக அனுஷ்டிக்க ஆலோசனை வழங்குமாறு வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார்.

(அ-2-266)


## துணுக்காய் பகுதி பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ-து)

# பதவி வெற்றிடம்

## பொது-முகாமையாளர் 101/07

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள மேற்படி பதவிக்கு தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. சம்பள அளவுத்திட்டம் 11450-14500 / 145X10-160X10

(சம்பளத்திற்கு மேலதிகமாகக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சுற்று நிருபத்திற்கமைவான இதர படிகளும் வழங்கப்படும்)

(அடிப்படைச் சம்பளத்தில் 15% + வாழ்க்கைப்படி 5850)

02.வயதெல்லை:-18 -45 வயது வரை

03. விண்ணப்ப முடிபு திகதி:- 30.07.2012

04. தகைமை:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 08 ஆவது சம்பள அளவுத்திட்ட பதவி யொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 09 ஆவது சம்பள அளவுத்திட்ட முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவி யொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப்பதவி ஒன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ,த.உயர்தரம் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்ட பதவியில் எட்டு (08) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

05. பிணை:- பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணம் செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

06 மேலதிக விபரங்களை சங்கப் பணிமனையில் தொ.பே. 024 324 8256, 0243841945 இலக்கமூடாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம்.

07. நிபந்தனைகள் :- கூட்டுறவு சங்கத்தில் கடமை புரிபவராயின் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது. சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்கள், வதிவிட சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் என்பன இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப் பங்களும், சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிராத விண்ணப்பங்களும் நிராகரிக் கப்படும்.

08 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை "தலைவர், துணுக்காய் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், துணுக்காய்" என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொது முகாமையாளர், 101/07 பதவிக்கான விண்ணப்பம்" என குறிப்பிட்டு நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர் , துணுக்காய் ப. ப.நோ.கூ.சங்கம், துணுக்காய்.**



# மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:-1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-திருவோணம் 1
கி.பா:-36.75 , 5 இல் செவ்.
தொழில்:-Software இன்ஜினியர் (Col)
B/038

பிறப்பு:-1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-கேட்டை 3
கி.பா:-36.5 ,10 இல் செவ்.
தொழில்:-BBA,MSC,MBA (விரிவுரையாளர் பல்கலை)
B/025

பிறப்பு:-1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-சித்திரை 4
கி.பா:-27.5, செவ் 3 இல்
தொழில்:-BSC,AIB
வங்கி உதவிமுகாமையாளர்
B/013

பிறப்பு:-1975 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-பூரட்டாதி 1
கி.பா:-43.25 , 8 இல் செவ்.
தொழில்:-MA, முகாமையாளர் , INGO, யாழ்
B/006

பிறப்பு:-1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-ஆயிலியம் 4
கி.பா:-8.75, 5 இல் செவ்.
தொழில்:-ஆங்கில ஆசிரியர்
B/011

பிறப்பு:-1978 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-விசாகம் 1
கி.பா:-18.75, லக்ன செவ்.
தொழில்:-தனியார் நிறுவனம்
B/045

பிறப்பு:-1975 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அனுஷம் 4
கி.பா:-42.5, 9 இல் செவ்.
தொழில்:-BSC,MSC (விரிவுரையாளர்)
G/016

பிறப்பு:-1976 இந்து
நட்சத்திரம்:-புனர்பூசம் 4
கி.பா:-37.5, 10 இல் செவ்.
தொழில்:-BSC, ஆசிரியை (Colombo)
G/012

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-Kalyanamalai.Jaffna.gmail.com

பிறப்பு:-1985 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரட்டாதி 3
கி.பா:-63 , லக்ன செவ்.
தொழில்:-MBBS டாக்டர்
G/033

பிறப்பு:-1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-புனர்பூசம் 2
கி.பா:-44.25, 8 இல் செவ்
தொழில்:-MBBS டாக்டர்
G/010

பிறப்பு:-1985 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரட்டாதி 1
கி.பா:-63, 8 இல் செவ்
தொழில்:-டாக்டர் நோர்வே P.R
G/021

ஊடக அனுசரணை வலம்புரி

## போஷாக்கு விழிப்புணர்வு கண்காட்சி இன்று

(இயக்கச்சி)

போசாக்கு விழிப்புணர்வு கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு இயக்கச்சி அ.த.க. பாடசாலையில் சுகாதார வைத்திய அதிகாரி எஸ். மைதிலி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பளை உதவி அரசாங்க அதிபர் சி. சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சேவைகள் பணிப்பாளர் பி. கார்த்திகேயன், கிளிநொச்சி மாவட்ட தாய், சேய் நல வைத்திய அதிகாரி எஸ். முரளிகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# இந்தியாவுக்கு விமானப்படையினரை

# பயிற்சிக்கு அனுப்புவதில் மாற்றமில்லை

## தமிழ் தலைவர்களின் எதிர்ப்பை கருத்தில் எடுக்கப்போவதில்லை

(கொழும்பு)

இந்தியாவில் இலங்கை படையினருக்கு பயிற்சி வழங்கும் நடவடிக்கைக்கு தமிழ்நாட்டு அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பினாலும் தொடர்ந்தும் இந்தியாவுக்கு பயிற்சிக்கு அனுப்பப்படுவர் என்று அரசாங்கம் கூறியுள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல,

படையினரின் வெளிநாட்டில் உள்ள மிகப் பெரிய பயிற்சித்தளமாக இந்தியா உள்ளது.

தமிழ்நாட்டில் ஒன்பது இலங்கை விமானப்படையினருக்கு பயிற்சி அளிக்கப்படுவதற்கு எதிர்ப்புக் கிளம்பிய விவகாரம் ஒரு தீவிரமான விடயமே அல்ல.

ஏனென்றால் தற்போது இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஆயிரத்து 500 தொடக்கம் இரண்டாயிரம் வரையிலான இலங்கைப் படையினர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இது பிராந்திய அரசியல் தலைவர்களினால் அரசியல் நோக்கத்துடன் கிளப்பப்பட்டுள்ள பிரச்சினை. இது இரு நாடுகளினதும் இராணுவ ஒத்துழைப்பில் பாதிப்பை ஏற்படுத்தாது.

தாம்பரத்தில் பயிற்சி பெற்று வந்த 9 இலங்கை விமானப் படையினரையும் இந்திய மத்திய அரசு பெங்களூருக்கு மாற்றி 'ய தற்கு உள்ளூர் அரசியல் நெருக்கடிகள் தான் காரணம் என்று அவர் கூறியுள்ளார். (அ-2)

## முல்லை கல்வி வலய க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கு செயலமர்வு

வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கல்வி வலய க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பௌதீகவியல் செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் மு/ வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வில் கொழும்பு முன்னணி ஆசிரியர்களான எஸ். கனகசபை, எஸ்.பகீரதன் ஆகியோர் வளவாளர்களாக செயற்படவுள்ளனர்.


தொடர்ந்து கொழும்பிலுள்ள சிங்கள, தமிழ்மொழிமூல பிரபல்ய பாடசாலையின் இறுதித் தவணை மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் இடம்பெறவுள்ளன.

இறுதிச் செயலமர்வுகள் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் அதே பாடசாலையில் யாழ். முன்னணி உயிரியல், இணைந்த கணித ஆசிரியர்களால் நடத்தப்படவுள்ளன.

உயிரியல் பாடத்திற்கு ரி.பாலசுப்பிரமணியம், வி.எஸ்.குணசீலன் ஆகியோரும் இணைந்த கணிதபாடத்திற்கு பி.இரவீந்திரன், பா. செந்தில்நாதன் ஆகியோரும் வளவாளர்களாக செயற்படவுள்ளனர்.

இச்செயலமர்வுகள் வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய இடம்பெறுவதுடன் இதுவரை 8 செயலமர்வுகள் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## லீசிங் முறையில் உழவு இயந்திரங்களை விவசாயத்துறை அமைச்சர் வழங்கினார்




(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தை சேர்ந்த 365 விவசாயிகளுக்கு நேற்று சுமார் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சிறிய ரக உழவு இயந்திரங்கள் லீசிங் முறையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்த சிறிய ரக உழவு இயந்திரங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை புத்தூர் கமநல சேவைகள் நிலையத்தில் இடம் பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கலந்து கொண்டு விவசாயிகளுக்கான உழவு இயந்திரங்களை வழங்கினார்.

வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த தலா 75 விவசாயிகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த 65 விவசாயிகளுக்கும் இந்தச் சிறியரக இரண்டு சில் உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

ஜப்பான் நாட்டினால் தயாரிக்கப்பட்ட இந்தச்சிறிய ரக உழவு இயந்திரங்கள் இவ்வாறு லீசிங் முறையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி குமாரசாமி (பேபி)



உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி குமாரசாமி (பேபி) 04.07.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை (சீதைப்பிள்ளை)யின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், குமாரசாமியின் அன்பு மனைவியும், பேரின்பரூபி, கஸ்தூரி, வித்தகம், ராஜ்குமார், கோசலை ஆகியோரின் அன்புத் தாயும். யோகதாசன், கலைச்செல்வன், ஜெகானந்தன், கஸ்தூரி, அஷ்மி ஆகியோரின் மாமியும், ஜனனி, நிலான், அஷ்மிதா, திருமுருகன், சங்கீதா, ஜனார்த்தனன், ரவித்தகன், ரிஷி, அகில்ராஜ், சிராஸ், அமான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, மகேஸ்வரி, அமிர்தமலர், அற்புதராசா மற்றும் தர்மலிங்கம், துரைராசா, துதிமலர், விக்னேஸ்வரன், இந்திரதாஸ், காசிலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பிள்ளையம்மா, அன்னப்பிள்ளை, செல்லம்மா மற்றும் கந்தசாவாமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2012) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு
0213218700. (8791)

தகவல்
குடும்பத்தினர்.

## இடமாற்றம் குறித்த ஆசிரியர்களின் முறைப்பாடு 17ஆம் திகதி விசாரணைக்கு

(யாழ்ப்பாணம்)

சேவைக்காலத்தினைப்பூர்த்தி செய்தும் இதுவரை இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்களின் முறைப்பாட்டிற்கான விசாரணை எதிர்வரும் 17 ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.மனிதவுரிமை பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்தார்.

வன்னிப்பிரதேசங்களில் 5 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியர்களாக கடமையாற்றி சேவைக்காலத்தைப்பூர்த்தி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றம் வழங்கப்பட்டமையையடுத்து இலங்கை ஆசிரியர் சங்கம் மாகாணக் கல்வியமைச்சுக்கு எதிராக யாழ்.மரபுரிமைக் காரியாலயத்தில் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் முறைப்பாடு செய்தார்.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை கடந்த மாதம் இடம்பெறவிருந்த நிலையில் சங்கத்தின் பொதுச்செயலாளர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் சமுகமளிக்க முடியாமல் போகவே எதிர்வரும் 17ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இதன்போது மாகாணக் கல்வியமைச்சின் உயர்மட்ட நிர்வாகத்தை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-4)

## பாதுகாப்பு கடவை அமைத்தல் குறித்த ஆலோசனைக்கூட்டம்

பளையில். இருந்து சாவகச்சேரி வரை புகையிரத பாதை அமைக்கும் போது தண்டவாளத்திற்கு குறுக்கே செல்லும் வீதிகளில் பாதுகாப்புக் கடவை அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.புகையிரத திணைக்கள சிரேஷ்ட பொறியியலாளர் ரி.பிறேம்குமார் தலைமையில் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில்நடைபெறவுள்ளது.

புகையிரத திணைக்கள உயரதிகாரிகள், உள்ளூராட்சி சபைகளின் பிரதி நிதிகள், வீதி அபிவிருத்தி திணைக்களம்மற்றும்வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-29)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
**The Only Official French Language Centre in Jaffna**
***Learn French the French Way***

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேயொரு பிரெஞ்சு மொழிக்கல்வி நிறுவனமாகிய **Alliance Française de Jaffna** ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்ச் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.

வகுப்புக்கள் ;- சனி, ஞாயிறுகளில்....

**புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

**61, Kachcheri-Nallur Road, Jaffna** **T.P:0212228093**
**E.mail:alliancejaffna@yahoo.com**

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு கட்டடம்

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம். (8788)

# குழப்பங்களை விளைவிக்கும் நபர்கள் தொடர்பாக ஜனாதிபதி கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

ஆளும் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக பிரசாரம் செய்து வருவோருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இவ்வாறு பிரசாரம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான பிரசாரங்களை மேற்கொள்வது கண்டிக்கப்பட வேண்டியது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது ஜனாதிபதி பகிரங்கமாக குறித்த நபர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குழப்பங்களை விளைவிக்கும் நபர்கள் எந்த நேரத்திலும் ஆளும் கட்சியை விட்டு விலகிச் செல்ல முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (9-2)

# வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றும்பணி ௯௮ வீதம் பூர்த்தி அடைந்துள்ளன

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் 98 வீதம் பூர்த்தியடைந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எஞ்சியுள்ள பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தற்போது துரிதப்படுத்தியுள்ளதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பணிகள் முடிவடைந்ததும் மக்கள் மீள் குடியேற்றப்படுவர் என வடக்கு, கிழக்கு அபிவிருத்தித் தொடர்பான ஜனாதிபதி செயலாளர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று கிராமசேவகர் பிரிவுகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு கிராமசேவகர் பிரிவுகளிலும் கண்ணிவெடி அகற்ற வேண்டியுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் அரசின் ஆலோசனையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. (அ-2)

# கல்வி அமைச்சரை பதவி விலக்குமாறு அமைச்சர் மேர்வின் கோரிக்கை?

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவை பதவி விலக்குமாறு அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மறைமுகமான முறையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பெயர் அடிக்கடி குறிப்பிடப்படாத விமர்சனங்கள் இல்லாத ஒருவரை தற்காலிகமாக கல்வி அமைச்சர் பதவிக்கு நியமித்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவிற்கு ஓய்வு வழங்கப்பட வேண்டுமென அமைச்சர் மேர்வின் கோரியுள்ளார்.

கிராமங்களில் இடி, மின்னல் தாக்குதல்களின் போது இரும்புத் துண்டொன்று வீட்டுக்கு வெளியே வீசி எறியப்படும். வீட்டு மக்களை இடி, மின்னல்தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் இவ்வாறு இரும்புத் துண்டு வீசப்படுகின்றது.

அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் இவ்வாறு இரும்புத் துண்டைப் போன்று அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை தாங்கிக் கொள்கின்றார் என அவர் தெரிவித்துள்ளார். (2-9)

# பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தியவர் கைது

உயர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பற்கள் உடையுமாறு தாக்குதல் நடத்திய விமானப்படை வீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டிகட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

பாடசாலைகளுக்கு இடையிலான ரகர் போட்டியொன்றை பார்வையிடச் சென்ற விமானப்படை வீரர் நுழைவுச் சீட்டு இன்றி மைதானத்திற்குள் பிரவேசிக்க முயற்சித்துள்ளார். இதன் போது ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாற்றமடைந்துள்ளது.

தாக்குதல் நடத்திய விமானப் படை வீரர் குண்டசாலை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தற்போது கொழும்பில் கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (2-9)




★ *988-டப்ளின் நகரம் அமைக்கப்பட்டது.*

★ *1212 -லண்டன் நகரின் பெரும் ப்குதியை தீ அழித்தது.*

★ *1460-வோர்விக் துணைநிலை மன்னர் ரிச்சார்ட் நெவில் இங்கிலாந்தின் 6-ம் ஹென்றி மன்னரின் படைகளை நோர்த்தாம்ப்டன் நகரில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்து மன்னரைச் சிறைப்பிடித்தான்.*

★ *1553-லேடி ஜேன் கிறே இங்கிலாந்தின் அரசியாக முடிசூடினாள்.*

★ *1778-அமெரிக்கப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி பிரித்தானியா மீது போரை அறிவித்தான்.*

★ *1796-ஒவ்வொரு நேர் முழு எண்ணும் அதிகபட்சம் மூன்று முக்கோண எண்களின் கூட்டுத் தொகையாகக் கொடுக்கலாம் என்பதை கார்ல் ஃப்ரெடெரிக்காஸ் கண்டுபிடித்தார்.*

★ *1806-வேலூர் சிப்பாய் எழுச்சி: தமிழ்நாட்டில் வேலூர்க் கோட்டையில் நிகழ்ந்த எழுச்சியில் நூற்றுக் கணக்கான ஆங்கிலப் படையினர் கொல்லப்பட்டனர்.*

★ *1890-வயோமிங் ஐக்கிய அமெரிக்காவின் 44-வது மாநிலமாக சேர்க்கப்பட்டது.*

★ *1909-ஜேர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் சேவைக்கு விடப்பட்டது.*

★ *1925-சோவியத் ஒன்றியத்தின் செய்தி நிறுவனம் டாஸ் ஆரம்பிக்கப்பட்டது.*

★ *1925-இந்திய ஆன்மிகத் தலைவர் மெஹெர் பாபா இறக்கும் வரையான (44-ஆண்டுகள்) மௌன விரதத்தை ஆரம்பித்தார்.*

★ *1951-கொரியப் போர்: அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.*

★ *1958-அலாஸ்காவில் மிகப் பெரும் சுனாமி அலை (கடல் மட்டத்தில் இருந்து 524 மீற்றர் உயரம்) பதியப்பட்டது.*

★ *1962-உலகின் முதல் தொலைத் தொடர்பு விண்கலமான டெல்ஸ் டார் விண்ணில் ஏவப்பட்டது.*

★ *1973-பங்காளதேஷை அங்கீகரிக்கும் தீர்மானம் பாகிஸ்தான் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டது.*

★ *1973- பாஹாமாஸ் பொதுநலவாயத்தின் கீழ் முழுமையான விடுதலை அடைந்தது.*

★ *1991-தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி சர்வதேச கிரிக்கெட் சபையில் மீண்டும் சேர்க்கப்பட்டது.*

★ *1991-ஆனையிறவு இராணுவத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் போர் தொடுத்தனர்.*


### பிறப்புக்கள்

★ *1925-மகதிர் மொகமட், மலேசியப் பிரதமர்*

★ *1949-சுனில் கவாஸ்கர்*

சுனில் காவஸ்கர் புகழ்பெற்ற இந்திய கிரிக்கெட் வீரர். இவர் டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் பத்தாயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுடன் தன் டெஸ்ட் தொடரை 1971 ஆம் ஆண்டு தொடங்கிய கவாஸ்கர், 34 சதங்களுடன் 10,122 ஓட்டங்களுடன் 1987 ஆம் ஆண்டு கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றார். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற பின் தொலைக்காட்சி வருணனையாளராக அவ்தாரம் எடுத்துள்ளார்.



மஹதிர் மொகமட் (வயது 86) மலேசியாவின் நான்காவது பிரதமராக 1981 முதல் 2003 வரை 22 ஆண்டுகள் பணியாற்றினார். ஆசியாவில் அதிக ஆண்டுகள் அரசுத் தலைவராக இருந்தவர்களில் ஒருவராவார். இவரது காலத்தில் மலேசியா நவீனமயப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேற்கத்திய மற்றும் வளர்ந்த நாடுகளை பெரிதும் குறைகூறி வந்துள்ளவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். இவரது பதவிக்காலத்தில் ஆசியாவின் ஒரு முக்கிய அரசியல் தலைவராக இவர் கருதப்பட்டதுடன், மேற்கத்தைய வாழ்க்கை முறையை பெரிதும் விமர்சனப்படுத்தி வந்தார்.

ஆசிய பொருளாதார வல்லரசுகளில் ஒன்றாக மலேசியாவை மஹதிர் உருவெடுக்கச் செய்தார்.

உலகப் புகழ் பெற்றவரும் இஸ்லாமிய உலகில் பெரிதும் போற்றப்படுபவருமான தலைவராக மஹதிர் விளங்கினார். நோபல் அமைதிப் பரிசுக்காக நான்கு அரசு சாரா அமைப்புக்கள், அவற்றில் இரண்டு கிறிஸ்தவ அமைப்புக்கள் மஹதீரை முன்மொழிந்தமை குறிப்பிடத்தக்கது.

**வேலூர் சிப்பாய் எழுச்சி:** தமிழ்நாட்டில் வேலூர் கோட்டையில் நிகழ்ந்த சிப்பாய் எழுச்சி யைக் குறிக்கும் நிகழ்வாகும்.


1805 இல் வேலூர் கோட்டையில் இருந்த மெட்ராஸ் ரெஜிமெண்டை சார்ந்த தென்னிந்திய துருப்புக்கள் கலகத்தில் வெடித்தெழுந்தனர். அந்த வருடம் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி, இந்தியப் படைகள் வியூதி, நாமம் போன்ற சமய அடையாளங்களை போடக்கூடாது. காதில் தோடு போடக் கூடாது. மேலும் ஐரோப்பிய இராணுவ உடைகளை அணிய வேண்டும் என ஆணையிட்டார். சிப்பாய்கள் ஐரோப்பிய முறைப்படி குழாய் வடிவ தொப்பியை போட்டு அதில் தோல் பட்டையை போட வேண்டும் என்வும் உத்தரவு வந்தது. அதனால் அங்கிருந்த 1,500 இந்து, முஸ்லிம் துருப்புக்கள் கோபமடைந்து வெடித்தெழுந்தனர். அந்த க்லகக்காரர்களின் தலைவர்களுக்கு 600 பிரம்படி கிடைத்தது. ஆனால் அது துருப்புக்களை இன்னும் கோபமூட்டியது.

இந்நிலையில் 10.07.1806 அதிகாலையில் பல ஆங்கிலேய அதிகாரிகள் அவர்கள் படுக்கையில் கொல்லப்பட்டனர். அங்கிருந்த 350 பிரிட்டிஷ் ஆட்களில் 100 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் இந்த கலகம் அரசியல், இராணுவ குறிக்கோள்களுடன் எழவில்லை. அதனால் இந்திய துருப்புக்களை, அதிகாரிகளை கொன்று களித்து வந்தனர். அவர்கள் வேலூர் கோட்டையின் கதவைக் கூட மூடவில்லை. இரண்டு நாட்களில் ஆர்காட்டிலிருந்த 19 ஆம் சிறிய குதிரைப் படை வேலூர் நோக்கி பாய்ந்துவந்து வேலூர் கோட்டையை கைப்பற்றியது. அந்த சண்டையில் 350 துருப்புகள் உயிர் துறந்தன. அந்த அளவு காயமடைந்தனர். ஏனைய இந்திய துருப்புக்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட துருப்புக்கள் பீரங்கியின் வாயில் கயிற்றால் கட்டப்பட்டு பீரங்கியால் சுட்டு கொல்லப்பட்டனர்.

இக்கலகம் 1857 பெரும் கலகத்திற்கு முன்னோடியாகும். இந்நிகழ்வின் ஞாபகமாக இந்திய அரசு ஜுலை 2006-ல் அஞ்சல் தலை வெளியிட்டது.

# தமிழர் பகுதிகள் அபிவிருத்தி நோக்கியதாகவே நகர்கின்றன

## இராஜதந்திரிகளே! பொய் பரப்புரையை முறியடியுங்கள்- கோத்தா மன்றாட்டம்



(கொழும்பு)

**புலம்பெயர் தமிழர்களின் பரப்புரைகளை எவ்வாறு முறியடிப்பது என்பது குறித்து வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கை இராஜதந்திரிகளுக்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் புலனாய்வுத்துறையின் மூத்த அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.**

தியத்தலாவ இராணுவ முகாமில் நடத்தப்பட்ட இரண்டுநாள் செயலமர்வில் நேற்று முன்தினம் புலம்பெயர் தமிழர்களின் பரப்புரைகளை முறியடிப்பது குறித்து விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில், போரின் இறுதிக்கட்டத்தில் மூன்று இலட்சம் பொதுமக்களை மீட்பதற்கு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்துள்ளனர். தற்போது எல்லா சோதனைச் சாவடிகளும் அகற்றப்பட்டு எல்லா வீதிகளும் திறக்கப்பட்டுள்ளன.

எவரும் நாட்டின் எந்தப் பகுதிக்கும்- எந்தக் கட்டுப்பாடும் இன்றி பயணம் செய்யலாம். 53 ஆயிரத்துக்கும் அதிகமான புலம்பெயர் தமிழர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் வடக்கிற்கு பயணம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளனர். அவர்கள் வடக்கு, கிழக்கில் அரசினால் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் திட்டங்களை பார்வையிட்டுள்ளனர்.

முன்னாள் புலிகளுக்கு வழங்கப்படும் புனர்வாழ்வின் முன்னேற்றங்கள் குறித்து அறிந்து கொண்டுள்ளனர். பலாலி படைமுகாம் தற்போது தேசிய பாதுகாப்புக்கான ஒரு நடவடிக்கையாக மட்டுமே பேணப்பட்டு வருகிறது. அதனைச் சுற்றியுள்ள 17 கிராம அதிகாரி பிரிவுகளை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் போது வடக்கு, கிழக்கு இளைஞர்களும் முன்னாள் புலிகளும் பொலிஸில் சேர்த்துக் கொள்ளப்படுவர். அவர்கள் குடிமக்கள் பாதுகாப்புப் படையிலும் இணைந்து கொள்ள முடியும்.

தேசிய மற்றும் மாகாண அரசியலில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகளின் முன்னாள் தலைவர்கள் தவிர ஏனையவர்கள் எதிர்காலத்தில் உள்ளூர் சபைகளில் ஈடுபட வாய்ப்புகள் உள்ளன. தற்போது பாடசாலைகள் கட்டப்பட்டுள்ளன அல்லது புனரமைக்கப்பட்டுள்ளன. வீதிக் கட்டமைப்புகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. அழிக்கப்பட்ட தொடரூந்துப் பாதைகள், பாலங்கள் மீள அமைக்கப்படுகின்றன.

ஆனாலும் சிறியளவிலான அனைத்துலக ஊடகங்கள் மட்டும் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை சுமந்து கொண்டு இலங்கை மீது தவறான குற்றச்சாட்டுகளை சுமத்துவதில் ஈடுபாடு காட்டி வருகின்றன.

இலங்கையின் சிறுபான்மை சமூகத்தின் அமைதியான, வளமான வாழ்வு பற்றி அனைத்துலக சமூகத்துக்கு அறியச் செய்ய வேண்டியது இராஜதந்திரிகளின் பொறுப்பு என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கோத்தபாயவின் இத்தகைய கருத்துக்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது அரசியல் உரிமை என்பதை அவர் உணர வேண்டும்.

அது தவறின் அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் வீணாகவே போய்விடுவதுடன் இதற்கான வெகுமதிகளும் குறைந்துவிடும் என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (அ-2)

# இராமேஸ்வரம் மீனவர்கள் 10 பேர் மன்னார் நீதிமன்றில் ஆஜராகுவர்

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகை மீட்க இராமேஸ்வரத்திலிருந்து மீனவர்கள் குழு ஓரிரு தினங்களில் இலங்கை செல்கிறது. இராமேஸ்வரத்திலிருந்து கடந்த 30 ஆம் திகதி படகில் மீன்பிடிக்க கடலுக்கு சென்ற நால்வர் காணாமல் போயுள்ளனர்.

இவர்களை தேடிச் சென்ற மீனவர்கள் உட்பட 10 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து இலங்கை அனுராதபுரம் சிறையில் அடைத்தது.

இவர்களின் இரண்டு படகுகளும் இலங்கை கடற்படையினர் வசம் உள்ளன. இலங்கை பொலிஸார் சிறையிலுள்ள 10 மீனவர்களையும் எதிர்வரும் 11 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

அன்று மீனவர்கள் விடுவிக்கப்படலாம் என்று மீனவர்களின் உறவினர்கள் கருதுகின்றனர். இந்நிலையில் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட இரண்டு விசைப்படகில் ஒன்று பழுதாகிய நிலையில் உள்ளதால் இரண்டு படகுகளையும் மீட்பதற்கு அரசு அனுமதியின் பேரில் இராமேஸ்வரத்திலிருந்து மீனவர்கள் குழு இலங்கை வருகின்றது.

50 பேர் கொண்ட மீட்புக் குழுவினர் எட்டுப் படகில் இராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து இன்னும் சில நாட்களில் இலங்கை கடல் பகுதிக்கு வருவார்கள் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# காட்டுயானை தொல்லை; மாணவர்கள் பரிதவிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள மீள்குடியேற்ற கிராமமான கந்தசாமி நகரில் உள்ள கந்தசாமிநகர் விபுலானந்தா வித்தியாலயத்திற்கு காட்டுயானைகளின் தொந்தரவால் மாணவர்கள் செல்ல முடியாதிருப்பதாக பெற்றோர் முறையிட்டுள்ளனர். இது தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துரைக்கப்பட்டதாகவும் அவர்கள் இதனை கவனத்தில் கொள்வார்கள் என்ற நம்பிக்கை தமக்குள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இப்பாடசாலையில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில் காட்டுயானைகளின் தொல்லையால் பாடசாலைக்கு இவர்கள் செல்வதற்கு மறுத்துவரும் நிலை காணப்படுவதாகவும் அப்பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (அ-2-266)

# ஒரு மாதத்திற்குள் நான்கு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

## முன்னெடுப்போம் என்கிறார் விக்கிரமபாகு

(கொழும்பு)

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்களைக் கொன்ற அரசு இன்று தமிழ் அரசியல் கைதிகளையும் அடித்து கொலை செய்கிறது என்று பொது எதிரணிக்கட்சிகளின் சார்பில் விக்கிரமபாகு கருணாரட்ன குமுறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளை அரசு கடுமையாகத் தாக்கி கொலை செய்கின்றது. இந்தச் சம்பவத்தை நாம் கடுமையாக எதிர்ப்பதோடு இதற்கு எதிராக நாடு முழுவதும் பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம்.

இதனடிப்படையில் ஒரு மாதத்திற்கு நான்கு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம். இந்தப் போராட்டங்கள் சாதாரண போராட்டங்கள் அல்ல. தற்போது ஆட்சியிலுள்ள அரசைக் கவிழ்த்து விரட்டியடிப்பதற்கான போராட்டங்களேயாகும். அதற்காக நாடு முழுவதிலுமுள்ள மக்களை ஒன்றுதிரட்டி செயற்படுவோம்.


ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்களைக்கொன்ற அரசு இது. அதுமட்டுமல்லாமல் முஸ்லிம் பள்ளிவாசலை உடைத்த அரசுதான் இது. இந்த அரசை ஆட்சியிலிருந்து விரட்டியடிக்க வேண்டும். அதற்காக மிகவும் சிறப்பான முறையில் செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம் என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பொது எதிர் அணிகள் வடக்கில் தேர்தல் நடத்தினால் நூற்றுக்கு ஐந்து சதவீதமான வாக்குகள் கூட அரசுக்குக் கிடைக்காது. இருப்பினும் அது நூற்றுக்கு இருபத்தைந்து சதவீத வாக்குகளைப் பெற்று வரும் எனத் தெரிவித்த பொது எதிரணிக்கட்சிகள் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் வாக்குப் போடுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர் எனத் தேர்தல் ஆணையாளர் கூறியது அரசுக்குப் பொருந்தும் எனவும் தெரிவித்தன.

தமிழ் பேசும் மக்கள் இந்த அரசை ஏற்கவில்லையென்பதை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டும் எனவும் அவை மேலும் தெரிவித்தன. (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 183


அனுகுண்டுத் தாக்குதலுக்கு முன் நாகசாகி

ஜப்பானிடம் பெரிய இராணுவம் உள்ளதைக் கணக்கில் கொண்ட அமெரிக்கா 1946 ஆம் ஆண்டிற்கு முன்னதாகத் தலைநாட்டின் தீவுகளில் தனது துருப்புகளை இறக்குவதில்லை என முடிவு செய்தது. படை இறக்கத்திற்குப் பின் ஜப்பானியத் தீவுகளிலும் ஆசியக் கண்டத்திலும் எவ்வளவு காலம் நடவடிக்கைகள் நீடிக்குமென யாராலும் கூறமுடியவில்லை. இதுதான் யுத்தத்தில் இறங்கி கூட்டு முயற்சிகளால் அதை முறியடிக்கும்படி யால்டா மாநாட்டிலேயே (1945 பெப்ரவரி) சோவியத் யூனியனுக்கு வேண்டுகோள் விடுக்கும்படி அமெரிக்காவையும் பிரிட்டனையும் கட்டாயப்படுத்தியது.

### பசுபிக் சமுத்திரப் பகுதியிலும் ஆசியாவிலும் நேசநாட்டவரின் இராணுவ நடவடிக்கைகள்

பசுபிக் சமுத்திரப் பகுதியில் ஜப்பானியப் படைத் தலைமை சிறிய அளவு சக்திகளைத்தான் விட்டு வைத்திருந்தது. இவையும் சிறுசிறு படையிருப்பிடங்களாக 45 இலட்சம் சதுர கி.மீ. அளவுள்ள பெரும் பரப்பில் சிதறிக் கிடந்தன.

பசுபிக் சமுத்திரத்தில் நேச நாட்டவரிடம் 3 படைகளும் பலமான கடற்படை, வான்படைச் சக்திகளும் இருந்தன. இச்சக்திகள் ஜப்பானியர்களை கணிசமான அளவு விஞ்சி நிற்க உதவின, படையிறக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் மிகப்பெரிய நடவடிக்கைகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

### பிலிப்பைன் தீவுகளில் உள்ள லுசோன் தீவைக் கைப்பற்றுவதற்காக நேச நாட்டினர் மேற்கொண்ட நடவடிக்கை

1945 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா லுசோன் தீவைக் கைப்பற்றுவதற்கான தயாரிப்பில் இறங்கியது. ஜப்பானிய ஜெனரல் யாமசீட்டாவின் தலைமையில் 2,50,000 இற்கும் மேற்பட்டோர் அடங்கிய ஜப்பானியத் துருப்புகளும் 4-வது வான் படையின் 400-500 விமானங்களும் அத்தீவில் இருந்தன. இதே அளவு விமானங்கள் தைவான், ஹோக்கினாவா, மற்ற பிரதேசங்களிலிருந்தும் லுசோனுக்கு அனுப்பப்படலாம்.

லுசோன் தீவைக் கைப்பற்றுவதற்காக நேச நாட்டினர் சுமார் 275,000 நபர்களையும் 2,200 விமானங்களையும் கூடுதலான விமானந்தாங்கிக் கப்பல்களின் விமானங்கள் சுமார் 1000 போர்க் கப்பல், போக்குவரத்துக் கப்பல், படையிறக்க கப்பல்களையும் ஈடுபடுத்தினர். பிரதான தாக்குதல் திசையில் லின்காயேன் வளைகுடா, மணிலா- 203,000 நபர்கள் அடங்கிய 6-வது படையின் பிரதான சக்திகள் செயற்பட வேண்டும். 12 பாதுகாப்பு விமானந்தாங்கிக் கப்பல்கள், 6 போர்க் கப்பல்கள் 6 கனரக குரூசர்கள் 49 நாசகாரிக் கப்பல்கள் உட்பட 7-வது கப்பற்படையின் 164 சண்டைக் கப்பல்கள் மற்றும் இழுவைப் படகுகள், பீரங்கிப்படகுகள், மற்ற வகைக் கப்பல்களும் படையிறக்கத்திற்கு வகை செய்தன.

தைவான், ரூக்யூ, லுசோன் தீவுகளில் உள்ள ஜப்பானிய விமானப்படைச் சக்திகளை 3-வது அமெரிக்க கடற்படையின் விமானப்படையைக் கொண்டு செயலாற்றத்தாக்கும் கடமை இக்கடற்படையின் செயல்முறை யூனிட்டிற்கு அளிக்கப்பட்டது. ஜெனரல் மாக்கார்துர் பொது படைத் தலைமை பொறுப்பை வகித்தார்.

நடவடிக்கைக்கான தயாரிப்புகளின்போது அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களின் விமானங்கள் ஜப்பானிய விமானத் தளங்கள், துருப்புகளின் திரட்டு, தற்காப்பு நிலைகள் மற்றும் லுசோன் தீவிலிருந்த மற்ற இடங்களின் மீது குண்டு மழை பொழிந்தன.

ஜனவரி 9 ஆம் திகதி லின்காயேன் வளைகுடாவின் கரையில் 6-வது அமெரிக்கப்படையின் துருப்புகள் இறக்கப்படலாயின. இது கப்பல்களின் பீரங்கிப்படையின் பலத்த குண்டுமழை மற்றும் விமானப்படை தாக்குதல்களின் கீழ் நடந்தது.


இதன் பயனாய் முதல் நாளன்று தீவில் 68,000 நபர்கள் இறக்கப்பட்டனர். 32 கி.மீ. நீளமும் 7.5 கி.மீ. வரை ஆழமுடையதுமான தாக்குமுனை கைப்பற்றப்பட்டது. இதன் பின் அமெரிக்கத் துருப்புகள் கடுமையான, உக்கிரமான சண்டைகளோடுதான் தீவின் ஆழத்திற்குள் செல்ல முடிந்தது. ஜப்பானியர்கள் ஒவ்வொரு எல்லையையும் உறுதியாகத் தற்காத்து நின்றனர். லுசோன் தீவில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளோடு கூட அமெரிக்கர்கள் 8-வது அமெரிக்கப் படையின் சக்திகளைக்கொண்டு தெற்கு பிலிப்பைன் தீவுகளை விடுவிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

லுசோன் தீவிலோ பிலிப்பைன் தீவுகளின் தலைநகரத்திற்காகக் கடும் சண்டைகள் நடைபெற்றன. அமெரிக்கர்கள் மார்ச் 4 ஆம் திகதி மணிலாவைக் கைப்பற்றியபின் இராணுவ நடவடிக்கைகள், பெரும்பாலும் தனித்தனியே இருந்த ஜப்பானிய படைத் திரட்டுகளை ஒழித்துக்கட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டன. மாக்கார்துர் படைத் தலைமையகத்தின் அறிக்கையின்படி அதிகாரப்பூர்வமாக பிலிப்பைன் தீவுகளில் இராணுவ நடவடிக்கைகள் ஜூலை 5 ஆம் திகதி முடிவடைந்தன. பிலிப்பைன்ஸ் கெரில்லாப்படை வீரர்களின் ஹுக்பாலாஹாப் என்ற ஜப்பானிய எதிர்ப்பு படை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்கர்களுக்குப் பெரிதும் உதவியது. லுசோனின் பல வட்டங்களை விடுவிப்பதில் இவர்கள் தீவிர பங்கேற்றனர்.

அமெரிக்கர்களின் தரப்பில் 37,800 நபர்களும் ஜப்பானியர்களின் தரப்பில் 205,500 நபர்களும் கொல்லப்பட்டனர். அமெரிக்கத் துருப்புகள் பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றியதன் விளைவாய் நேச நாட்டினர், தென்சீனக் கடலிலும் இந்தோசீனா, மலாயா கரையோரங்களையும் ஜப்பானிய போக்குவரத்து மார்க்கங்களின் மீது கடலிலிருந்தும் வானிலிருந்ததும் நன்றாக தாக்குதல் தொடுக்கவும் வாய்ப்புகளைப் பெற்றனர்.

### இயோ (இவாட்ஸுமா) தீவில் அமெரிக்க இறக்கு படையின் படையிறக்கம்

இவாட்ஸுமா என்பது எரிமலையிலிருந்து தோன்றிய ஒரு தீவு. இதன் பரப்பு 20.3 சதுர கி.மீ. இதில்



அனுகுண்டுத் தாக்குதலுக்கு பின் நாகசாகி


ஜப்பானியர்களுக்கு இரண்டு விமானத் தளங்கள் இருந்தன. மூன்றாவது கட்டி முடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

படையிருப்பிடத்தில் 23,000 நபர்கள் இருந்தனர். விமானத் தளங்களிலோ 10 விமானங்கள் மட்டுமே நின்றன. ஆனால், வானிலிருந்து தனது துருப்புகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக ஜப்பானியர்களால் டோக்கியோவில் விமானத் தளங்களில் இருந்த 3-வது வான் படையின் விமானங்களைப் பயன்படுத்த முடிந்தது.

(தொடரும்)

## இராணுவ ஜப்பானின் தோல்வி


அனுகுண்டுத் தாக்குதலுக்கு முன் ஹீரோசீமா


அனுகுண்டுத் தாக்குதலுக்கு பின் ஹீரோசீமா

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 03:- தங்கள் பாதங்களை பாதுகாக்க நீரிழிவு நோயாளிகள் என்ன செய்ய வேண்டும்?**

**பதில்:-** நீரிழிவு நோயாளிகள் மற்றவர்களை விட தங்கள் பாதங்களின் இரத்த ஓட்டம் இயல்பாக இருப்பதில்லை என்று புகார் கூறுவார்கள். அதனால்தான் நீரிழிவு நோயாளிகள் தங்கள் முகத்தை விட தங்கள் பாதங்களில் அதிக கவனம் வைத்தல் வேண்டும். ஒருவருக்கு நீரிழிவு நோய் இருந்தால் அவரது இரத்த நாளங்களில் அடைப்பு இருக்கும். இதன் காரணமாக சில தொற்றுக்கள் அல்லது தொற்று நோய்கள் வருவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு அதிகமாகும். வலி, குளிர், உஷ்ணம் முதலியவற்றை எதிரொலிக்கும் உணர்ச்சிமிக்க நரம்புகள் கூட அவர்களுக்கு ஒழுங்காக செயற்படுவதில்லை. அவர்களுக்கு காயம் ஏற்பட்டாலும் அவர்கள் வலியை உணராமல் இருப்பதற்கு இதுதான் காரணமாகும். இக்காயம் தசை அழுகலில் கொண்டு போய் விட்டு விடும். பின்னர் காலை வெட்டி எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

புகைபிடிக்கும் நீரிழிவு நோயாளிகளுக்கும் இம்மாதிரியான வியாதிகள் வரும். பாதங்களை நன்கு கவனித்து முறையான உடற்பயிற்சிகளும் செய்தால் இம்மாதிரியான ஆபத்துக்களை தவிர்க்கலாம்.

✦ **நடைப்பயிற்சி:** அரைமணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் சுறுசுறுப்பாக நடைப்பயிற்சி மேற்கொள்ளுங்கள். சிறிது சிறிதாகதுூரத்தை அதிகரித்துக்கொள்ளுங்கள்.

✦ **மாடிப்படி ஏறுதல்:** கால்களில் ஏதேனும் அணியாமல் வேகமாக மாடிப்படி ஏறி, இறங்குங்கள்.

✦ **நாற்காலி பயிற்சி:** நாற்காலியில் அமர்ந்து கைகள் இரண்டையும் கட்டிக் கொள்ளுங்கள். அப்படியே 10 முதல் 20 தடவை எழுந்து அமருங்கள்.

✦ **கால் தசைகளுக்கு:** சுவர் அருகே நேராக நிமிர்ந்து நில்லுங்கள். கைகள் இரண்டையும் சுவர்களில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படியே சுவரை பார்க்கக் குனியுங்கள். கால்கள் சுவரை விட்டு சற்று விலகி இருக்க வேண்டும். பாதங்கள் தரையில் நன்றாக ஊன்றி இருக்க வேண்டும். நேராக நிமிர்ந்து நிற்க வேண்டும். இந்நிலையில் உங்கள் கைகள் இரண்டையும் 10 முறை மார்பின் மீது குவித்து கீழே போங்கள். இப்பயிற்சி உங்கள் கால்கள் மரத்துப் போவதை தவிர்க்கும்.

✦ இரண்டு கைகளினாலும் நாற்காலியை பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் முதுகு நேராக இருத்தல் வேண்டும். உங்கள் முட்டிகளை 10 தடவை மடக்கி நிமிர்த்துங்கள்.

✦ **கால் விரல்களுக்கு:** நாற்காலியை பிடித்துக் கொண்டு நேராக நில்லுங்கள். உங்கள்கால்விரல்களைதரையில் ஊன்றிகுதிக்கால்களை மேலே உயர்த்தி மீண்டும் கீழே இறக்குங்கள்.

✦ **குதிக்கால்களை உயர்த்துதல்:** கால் விரல்களை தரையில் ஊன்றி குதிக்கால்களை மேலே உயர்த்தி மெதுவாக மீண்டும் கீழே இறக்குங்கள். 20 தடவை இம்மாதிரி செய்யுங்கள். சிறிது இடைவெளிக்குப் பின்னர் உங்கள் உடல் எடை முழுவதையும் ஒரு காலின் மீது வையுங்கள். பின்னர் மற்றொரு காலிற்கு மாற்றிக் கொள்ளுங்கள்.

**கேள்வி04:- நீரிழிவு நோயாளி குறிப்பிட்டகால இடைவெளியில் E.C.G பரிசோதனை செய்து கொள்ள வேண்டுமா?**

**பதில்:-** ஆம். நீரிழிவு நோயாளிக்கு மாரடைப்பு வரும். ஆனால், அது அவருக்கு தெரியாது. இம் மாரடைப்பை மௌனமான மாரடைப்பு என்பர். இம்மாரடைப்பு வரும் பொழுது ஒருவர் அமைதியின்றி இருப்பார்.

மூச்சுத்திணறல் இருக்கும், வியர்க்கும், ஆனால், நெஞ்சு வலி இருக்காது. இம்மாதிரி அறிகுறிகள் இருந்தால் அதை அலட்சியப் படுத்தக் கூடாது. அதனால் நீரிழிவு நோயாளி தொடர்ந்து E.C.G பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அது மௌனமான மாரடைப்பு வருவதை காட்டிக் கொடுத்து விடும்.

**கேள்வி 05:- நீரிழிவு நோயாளிகள் விடுமுறை நாள் கேளிக்கைகளில் கலந்து கொள்ளலாமா?**

**பதில்:-** சில விடயங்களை மனதில் வைத்துக் கொண்டு நீரிழிவு நோயாளிகள் விடுமுறை நாள் கேளிக்கைகளில் பங்கு பெறலாம். அவை:

✦ கேளிக்கைகளில் ஈடுபட்டாலும் மருந்து மாத்திரைகள் எடுத்துக் கொள்வதை நிறுத்தக் கூடாது.

✦ நான்கு முதல் ஆறு மணி நேரத்திற்கு ஒரு முறை நொறுக்குத் தீனி ஏதேனும் சாப்பிட வேண்டும்.

✦ கையில் தேவையான அளவு மருந்து மாத்திரைகள் வைத்திருக்க வேண்டும்.

✦ எப்போதும் மருத்துவர் தரும் சிட்டை கையில் தயாராக வைத்திருக்க வேண்டும்.

**கேள்வி: நீரிழிவு நோயாளி நீண்ட நாள் பயணம் மேற்கொள்ளலாமா?**

**பதில்:-** நீரிழிவு நோயாளி நீண்ட நாள் பயணம் மேற்கொண்டால் அவ்வப்போது இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். உணவு மாற்றம் மற்றும் பயணிப்பதன் காரணமாக இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்கும்.இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளவில்லை என்றால் நோயாளிக்கு இது தெரியாது.

**15**

**கேள்வி :- 07 நீரிழிவு நோயாளி நாட்டு மருந்து சாப்பிடத் தொடங்கினால் ஏற்கனவே சாப்பிட்டு வரும் பிற மருந்து மாத்திரைகளை நிறுத்திவிடலாமா?**

**பதில்:-** ஏதோ ஒரு மாயையின் காரணமாக நீரிழிவு நோயாளி தான் எடுத்து வரும் மருந்து மாத்திரைகளை நிறுத்தி விட்டு சில மூலிகைகள் அல்லது நாட்டு மருந்துகளை சாப்பிட்டால் நீரிழிவு நோய் கட்டுக்கடங்காமல் போய் விடுவதோடு சிக்கல்களும்

## டாக்டர்.A.K.ஜிங்கான்

பெரிதாகி விடும். அதனால் என்னதான் நாட்டு மருந்து சாப்பிட்டாலும் இன்சுலின் மற்றும் மருந்து மாத்திரைகளை ஒருபோதும் நிறுத்தக் கூடாது.


**கேள்வி 08 :- நீரிழிவு நோயாளி தான் எடுத்து வரும் மருந்து மாத்திரைகளை குறைத்துக் கொள்ளலாமா?**

**பதில் :-** மருத்துவரை கலந்தாலோசிக்காமல் ஒருபோதும் மருந்து மாத்திரைகளின் அளவை குறைத்துக் கொள்ளக் கூடாது. இரத்தப் பரிசோதனை செய்த பின்னர் மருத்துவர் நோயாளி எந்த அளவுக்கு மருந்து மாத்திரைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கூறுவார்.

**கேள்வி 09 :- உடற்பயிற்சி செய்யத் தொடங்குவதற்கு முன்பு நீரிழிவு நோயாளி இரத்தப் பரிசோதனை செய்து சீனி அளவை தெரிந்து கொள்ள வேண்டுமா?**

**பதில்:-** உடற்பயிற்சி செய்கையில் சில் சமயம் நீரிழிவு நோயின் ஓர் அடையாளமான கீட்டோ அஸிடோஸிஸ் (Ketoacidosis ) காணப்படும். அதனால் உடற்பயிற்சி செய்ய தொடங்குவதற்கு முன்பு கட்டாயம் இரத்தப் பரிசோதனை செய்து சீனியின் அளவை அறிந்து கொள்ள வேண்டும்.

(தொடரும்)




# கோடையில் வயிற்றுத் தொல்லைகளும் அவற்றிலிருந்து விடுபடும் முறைகளும்

**கடந்த வார தொடர்ச்சி...**

வயிற்றுப்புண், வயிற்று உப்புசம் இவை இரண்டும் அநேக மக்களை வாட்டி வதைக்கிறது. நாம் உண்ணும் உணவுகளை அறிந்து கொண்டு மாற்ற வேண்டியவற்றை மாற்றினால்தான் வயிறு சம்பந்தமான நோய்களில் இருந்து விடுபட முடியும்.

நாம் உண்ணும் உணவு மூன்று முக்கிய சக்திகளை கொண்டுள்ளது. காபோவைதரேற்று எனும் மாச்சத்து, புரோட்டீன் என்னும் புரதச்சத்து மற்றும் கொழுப்பு சக்தி. பெரும்பாலான உணவுகள் சிறுகுடலில்தான் ஜீரணிக்கப்பட்டு செரிக்கப்படும்.

ஆனால், இவற்றை ஜீரணிக்க கல்லீரல் முக்கிய திரவங்களை உருவாக்கி கொண்டே இருக்கிறது.

இந்த மூன்று சக்திகளில் புரோட்டீன் சக்தி அமோனியா எனும் வாயுவை உருவாக்கும் தன்மை கொண்டது. குறிப்பாக கொண்டக்கடலை, நிலக்கடலை, பருப்பு வகைகள் அமோனியாவை உருவாக்குவதால் வயிற்று உப்புசம் உள்ளவர்கள் இவற்றை சேர்க்க வேண்டாம்.

அசைவ உண்வுகள், புரோட்டீன் மற்றும் கொழுப்பு நிறைந்தவை. புரோட்டீன் வாயுக்களை உருவாக்கும் கொழுப்பு சக்தி எளிதில் செரிமாணம் ஆகாமல் இருப்பதால் அசைவ உணவுகள் வயிற்றுக் கோளாறுகளை அதிகரிக்கும்.

சில கூறிப்பிட்ட நெறிமுறைகளை கையாளுவதன் மூலமாக வயிற்று உப்புசம், வாயு மற்றும் வயிற்றுப்புண் போன்ற நோய்களில் இருந்து நாம் விடுபடலாம். அவை யாவன:-

✦ மூன்று வேளை உணவில் காலை உணவை நன்றாக சாப்பிடலாம். மதிய உணவை குறைத்து சாப்பிடவும் மூன்றாம் வேளை உணவு மிகமிக குறைவாக இருக்கட்டும்.

✦ இரவு 7 மணிக்கு பின்னர் எதையும் சாப்பிட வேண்டாம்.

✦ சாப்பாடு மற்றும் தண்ணீர் அருந்திய பின் சுமார் அரை மணி நேரமாவது கழிந்த பின்னர் படுக்கவும்.

✦ சாப்பிட்டவுடன் மெதுவாக நடந்து கொண்டிந்தால் நல்லது. உடனே படுக்க வேண்டாம்.

✦ காரத்தை உணவில் குறைக்கவும். குறிப்பாக பச்சை மிளகாய், மிளகு, காரங்கள் நல்லதல்ல.

✦ மது அருந்தவேண்டாம்.

✦ தேநீர் மற்றும் கோப்பி அருந்துவதை ஒரு பழக்கமாக மாற்றாதீர்கள்.

✦ கோலா வகை செயற்கை பான்ங்கள் வாயுக்கள் நிறைந்தவை.

✦ வயிற்று உப்புசம் நிறைந்தவர்கள், உடனடியாக ஜீரணிக்கும் அரிசி பதார்த்தங்களை சாப்பிடலாம். மெதுவாக ஜீரணிக்கும் கோதுமையை குறைக்கலாம். (நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது).

**செய்யக்கூடாதவை**

✦ வயிற்றுக் கோளாறுகளை உதாசீனம் செய்யாதீர்கள். உதாசீனம் செய்தால் இவை வயிற்று புண்களாக மாறி தீராத தொல்லைகளைத் தரும்.

✦ சுய மருத்துவம் வேண்டாம். வயிற்றுக் கோளாறுகள் வரும்பொழுது மருத்துவரிடம் ஆலோசனை பெற சோம்பேறித்தனம் கொண்டு கடைகளில் நாம் விரும்பும் மாத்திரைகளையோ அல்லது வேறு மருந்துகளையோ சாப்பிடும் வழக்கம் நம்மிடம் அதிகமுண்டு. தகுந்த மருத்துவ ஆலோசனை பெற்று மருந்து, மாத்திரைகள் சாப்பிடவும்.

✦ இன்று அலோபதி சிகிச்சை முறையில் பல்வேறு புதிய பரிசோதனைகள் மற்றும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

✦ வயிற்றுப் பிரச்சினைகள் முற்றிலும் குணமாகும் வரை பத்திய உணவை மாற்றாதீர்கள்.

✦ உணவு நெறிமுறை மிகவும் முக்கியமாக பின்பற்ற வேண்டிய மருத்துவ சிகிச்சையாகும். இதில் மாற்றம் செய்யாதீர்கள்.

✦ மதுபானம், கோப்பி, காரம் வாயு உண்டு பண்ணும் பல்வேறு உணவுகள், அசைவம், முட்டை முதலியவற்றை முற்றிலுமாக குணமாகும் வரை சேர்க்க வேண்டாம்.

வயிற்றுக்கோளாறுகள், வயிறு உப்புசம், மாந்தம், வயிற்றுப்புண் போன்றவை வராமல் பாதுகாத்துக்கொள்ள கடைகளில் வீதி ஓரங்களில் உள்ள கடைகளில் உணவுகளை சாப்பிடாதீர்கள். ஒருமுறை வயிறு கெட்டால் அது குணமடைய பல மாதங்கள் ஆகலாம். முற்றிலும் குணமாகும் வரை பத்திய உணவு நெறிமுறைகளை பின்பற்றுங்கள்.

(முற்றும்)

# சடலத்தை சொந்த மண்ணில் புதைக்கும் உரிமையை அரசாங்கம் பறித்துவிட்டது

## ஜே.வி.பி. எம்.பி. காட்டம்

(கொழும்பு)

**கொலை செய்யப்பட்ட தமது மகனின் சடலத்தை பெற்றோரின் சொந்த கிராமத்தில் அடக்கம் செய்வதற்கான உரிமையையும் அரசாங்கம் பறித்துள்ளதென ஜே.வி.பி.யின் அரசியல் குழு உறுப்பினரும் எம்.பி.யுமான அனுரகுமார திஸாநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜே.வி.பி.யின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் அரசியல் கைதிகள் இல்லையென்றால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

வவுனியா சிறைச்சாலையில் கொலை செய்யப்பட்ட அரசியல் கைதியான நிமலரூபனின் சடலத்தை அவர்களின் பெற்றோர்களிடத்தில் கையளித்து அவர்களுக்கு விருப்பமான இடத்தில் அடக்கம் செய்வதற்கான அடிப்படை உரிமையை அரசாங்கம் பறித்துள்ளது.

மரணமடையும் தமது உறவினர்களை அவர்களது உறவினர்கள் விரும்பிய போது அடக்கம் செய்ய உரிமையுண்டு.

இதற்கு முன்பும் கட்டுநாயக்காவில் ரொஷான் சானக கட்டுவன, சிலாபத்தில் அரசாங்கத்தினால் கொலை செய்யப்பட்டவர்களின் மரணச் சடங்குகள் தொடர்பிலும் இவ்வாறான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டன.

இக்கொலையுடன் தொடர்புபட்டோரை கைது செய்து தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் இல்லையென அரசாங்கம் கூறுகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இக்கூற்றை நாம் நிராகரிக்கின்றோம்.

இலங்கையில் அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்கள் பல்வேறு தடுப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் பல வருடங்களாக எதுவிதமான வழக்குகளும் தாக்கல் செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் காரணங்களுக்காவே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றார். (அ-2-9)

## தேடுதல் வேட்டையில் 107 பேர் கைதாகினர்

(கொழும்பு)


மாத்தறை வலய அனைத்து பொலிஸ் நிலைய பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 107 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தேடுதல் நடவடிக்கையானது நேற்று முன்தின்ம் காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மொத்தம் 182 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இத்தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட சுமார் 124 பிடிவிறாந்துகளுடன் தொடர்புடைய நபர்களை கைது செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட இத்தேடுதல் நடவடிக்கையில் 107 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அந்தந்த பொலிஸ் நிலையங்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. (அ-2)


பூநகரி மட்டுவில் நாடு சோபாலபிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வின் போது... (படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)

## ரந்தெனிகல வனத்தில் தீ; 50 ஏக்கர் நிலம் எரிந்து நாசம்

(ரந்தெனிகல)

ரந்தெனிகல வனப்பகுதியில் ஏற்பட்ட திடீர் தீயினால் 50 ஏக்கர் வனப்பகுதி முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீச் சம்பவம் நேற்று முன்தினம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ ஏற்பட்டவுடன் திரிபெஹே பொலிஸார் பிரதேச மக்களின் உதவியுடன் தீயை அணைக்க நடவடிக்கை எடுத்தனர்.

தீயினால் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை. தீ ஏற்பட்டமைக்கான காரணமும் கண்டறியப்படவில்லை. அதிக வெப்பத்தால் தீ ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (அ-2)

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்த சர்வதேசம் தலையிட வேண்டும்

## பொன்சேகா கூறுகிறார்

அரசாங்கத்தைக் கவிழ்க்க போராட்டம் நடத்தப்படும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக வழிமுறைகளில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும். அரேபிய கிளர்ச்சியைப்போன்று இலங்கை மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்த வேண்டும். அரசாங்கம் தம்மையும் தமது குடும்பத்தையும் தண்டித்துள்ளதாகவும் எதிர்க்கட்சிகள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைதனிமைப்படுத்தப்படுவதனைவிடுத்து நடைபெறும் குற்றச்செயல்களை தடுக்கவும் நாட்டுக்கு பாதுகாப்பு வழங்கவும் சர்வாதிகார ஆட்சிமுறைமை நீடித்தால், மனித உரிமைகள் மீறப்பட்டால் மக்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் பங்களிப்பை வழங்க வேண்டும்.

ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பாரியளவில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை எனத் தொடர் குற்றச்செயல்கள் நாட்டில் இடம்பெற்று வருகின்றன.

லிபியாவைப்போன்று இலங்கையில் குழப்பங்கள் ஏற்படக்கூடாது என்பதே தமது வேண்டுதல். மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்த தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றேன்.

யுத்தத்தை வெற்றியீட்டிய பெருமை அனைவரையும் சாரும் எனவும் திட்டமிட்டுத்தாக்குதல்களுக்கு தலைமை வகித்தமை பெருமிதம் அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினர் யுத்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

எவ்வாறெனினும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய பதிலளிக்கத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு குற்றச்சாட்டையும் எதிர்கொள்ளத் தயார் எனவும் பொதுமக்கள் நிலைகள் மீது படையினர் தாக்குதல் நடத்தவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## சோளனை ஏற்றுமதி செய்கிறது அரசு; வன்னியில் திரிபோசாவுக்கு தட்டுப்பாடு

(றெட்பானா)

எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் திரிபோஷா சத்துணவு மா கலவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாலூட்டும் தாய்மார்களுக்கும் சிறுவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்ற திரிபோஷா எல்லோருக்கும் வழங்கக்கூடிய வகையில் அரசிடம் இருந்து கிடைப்பதில்லை என மருத்துவ சேவையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களாக காணப்படும் இப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இருந்து வருகின்றது.

குறிப்பாக வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்ற சிறுவர்கள் சத்துணவு இன்றி பல போஷாக்கு குறைபாடுகள் உள்ளவர்களாக காணப்படுவதுடன் இலகுவில் நோய்க்கும் உள்ளாகின்றனர்.

இந்நிலையை தவிர்ப்பதற்காக அரசிடம் இருந்து வழங்கப்படுகின்ற சத்துணவுகள் எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் அவற்றை நிறைவாக குறையின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்நிலையில் பொருளாதாரஅபிவிருத்தி அமைச்சு சிறுதானிய பயிர் உற்பத்தியில் வெற்றிகண்டு தற்போது வெளிநாடுகளுக்கு சோளனை ஏற்றுமதி செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. (அ-3-260)

## மக்களுக்கான வங்கிக் கடன் திட்டத்தில் கரிசனை வேண்டும்

### மக்கள் சுட்டிக்காட்டு

வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களை உரிய நேரத்திலும் இலகுவாகவும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரச வங்கிகளிடமும் தனியார் வங்கிகளிடமும் சிறுதொழில் முயற்சிக் கடன்களை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கும் மக்கள் அவற்றை விரைவாகவும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ள முடியாதநிலை காணப்படுகின்றது. கடன்களுக்காக விண்ணப்பித்து இரண்டு மாதங்களின் பின் ஒரு தொகுதியினருக்கு மட்டும் சிறுதொகைக்கடன் வழங்கப்படுகின்றது. அத்துடன் கடன் திட்டமும் நிறைவடைந்து வருகின்றது. இதனால் ஏனையவர்களுக்கு இக்கடன் கிடைக்கப்பதில்லை. எனவே இக்கடன் திட்டத்திற்காக வங்கிகளில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சகல மக்களும் பயன்பெறக்கூடிய வகையில் இக்கடன் திட்டங்கள் தொடர்பான விளக்கங்களை சாதாரண பாமர மக்களும் விளங்கும் வகையில் தெளிவுபடுத்தி விரைவாகவும் இலகுவாகவும் இக்கடன்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-260)

# மக்கள் தீர்ப்பா? அதிகாரமற்ற மாகாணசபையா?

கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகக் கடுமையான வீழ்ச்சியை இந்த வாரம் இலங்கையின் பங்குச் சந்தை எதிர்கொண்டுள்ளது. 2011 நவம்பரில் இருந்து இன்றுவரை 17.5 சதவிகிதம் தனது ரூபாய் நாயணத்தின் பெறுமைதியை இலங்கை இழந்துள்ளது.

இறக்குமதியாகும் அத்தியாவசிய எரிபொருளான மசகு எண்ணெய்க்கு செலுத்த வேண்டிய டொலர் நாணயப் பற்றாக்குறையால், அனைத்துலக நாணய நிதியத்திடமிருந்து 500 மில்லியன் டொலர்களை கடன் வாங்க வேண்டிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது பி.பீ.ஜெயசுந்தராவின் திறைசேரி.

ஜனாதிபதி பெருமைப்படும் 7.2 சதவீத பொருளாதார வளர்ச்சி வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கொண்டுவர இயலாத நிலையில் ஊடகங்களில் சொல்லப்படும் சுயதம்பட்டங்கள் போலியானவை என்பதை தெரிந்துகொள்வது சுலபம்.

அத்தியாவசியப் பொருட்களின் செயற்கையான விலை அதிகரிப்பினால், நாட்டின் பணவீக்கம் கடந்த ஜூன் மாதத்தில் என்றுமில்லாதவாறு உச்சத்தைத் தொட்டுள்ளது. பணவீக்கத்திற்கு ஏற்றவாறு தமது சம்பளத்தை உயர்த்துமாறு தொழிலாளர்கள் போராட ஆரம்பித்துள்ளனர்.

தேசிய இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படமுடியாத நிலைபோன்று மத்திய வங்கிக்கும் திறைசேரிக்கும் இடையே முறுகல் நிலை அதிகரிப்பதைக் காணலாம். வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு கடன் கொடுக்க முடியாத அளவிற்கு அதன் திரவப்பணம் வற்றிச் செல்கிறது.

அதனை நிவர்த்தி செய்ய ரூபாய் நாணயத்தை மேலதிகமாக அச்சடித்தால் பணவீக்கம் அதிகரிப்பதை தடுக்கமுடியாமல்போய்விடும். இப்பிரச்சினையானது இலங்கை மட்டுமல்லாது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் விரிவடைவதைக்காணலாம்.

வங்கிகளுக்கிடையே நிகழும் பரிவர்த்தனையில் வட்டி வீதத்தில் ஏற்பட்ட லைபோர் (LIBOR) குளறுபடிகளால் பிரித்தானியாவின் மிகப்பெரிய வங்கியான பார்க்லேயில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு அதன் தலைவர் பொப் டயமன்ட் பதவி விலகியுள்ளார்.

நிதி நெறியாள்கை அதிகார சபையின் கவனம் இவ்விவகாரத்தில் குவிவதால், மேலும்பல வங்கிகள் சிக்கல்களை எதிர்கொள்ளப் போவதைக் காணலாம். இலங்கையிலும் இத்தகைய நாணயப் பரிவர்த்தனை குளறுபடிகள் வெளியில் பெரிதாகத் தெரியாத அளவிற்கு உருவாகிக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

**நன்றி: இணையம்**

ஆடை மற்றும் தேயிலை ஏற்றுமதித் துறையில் மேலதிக கவனம் செலுத்தப்படவேண்டும் என்று பல தென்னிலங்கை பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினாலும், இலங்கையின் பொருளாதாரத்தை சுற்றுலாப் பயணத்துறையை மையமாகக்கொண்டு உருவாக்க வேண்டுமென *மகிந்த சிந்தனை* அடம்பிடிப்பதைக் கவனிக்கலாம்.

நுவரெலியா உட்பட நாடெங்கும் உள்ளூர் விமான நிலையங்களை நிர்மாணிப்பதும் சீன இந்திய முதலீட்டில் அதிவேக விரைவுப்பாதைகளை அமைப்பதும் எயர்லங்கா, மிகின் லங்கா விமான சேவைகள் நட்டத்தில் இயங்கினாலும் மேலதிக பயணிகள் விமானங்களை வாடகைக்கு வாங்குவதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு உல்லாசபயணத்துறை பொருளாதாரத்தில் இருக்கும் அதீத நம்பிக்கையையும் ஈடுபாட்டையும் காட்டுகின்றது.

இதேவேளை உல்லாசப் பயணத் துறையில் முதலீடு செய்வதற்கு பல



## சர்வதேசத்தின் முயற்சி எதை நோக்கி..!

ஆசியநாடுகள் முண்டியடிப்பதைக் கவனிக்கலாம். அத்தோடு மேற்குலகு உட்பட பல வல்லரசுகள் திருமலைத் துறைமுகத்தில் கனரகத் தொழிற்சாலைகளை நிர்மாணிக்க கூட்டாகச் செயற்படும் செய்தியையும் பார்க்கலாம்.

நல்லிணக்கம் என்கிற பாதை ஊடாக தமது முதலீடுகளை இலங்கைக்குள் கொண்டுசெல்ல விரும்பும் அமெரிக்காவும் இந்தியாவும் வெவ்வேறான நகர்வுகளை மேற்கொள்கின்றன. ஊடக அடக்குமுறையைக் கண்டித்து அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் அறிக்கைவிடும் அதே வேளை முதலீடுகள் குறித்தான இணக்கப்பாட்டு அரசியலை முன்னகர்த்த அவைதவறவில்லை என்கின்ற செய்தியும் கவனிக்கத் தக்கது.

இலங்கைக்கு அமெரிக்கா வழங்கும் ஜி.எஸ்.பி. சலுகையை மீளாய்வு செய்வதற்கு அதன் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களிற்கான வர்த்தகப் பிரதிநிதி மைக்கல் டெலோனி கடந்தமாதம் 13 ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்தார்.

இம் மீளாய்வின் வெளிப்பாடாக இச் சலுகையானது எவ்வித மாற்றமும் இன்றி தொடரும் என்கிற வகையில் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி றொன்கேர்க் கடந்த 29 ஆம் திகதியன்று தெரிவித்த செய்தியினை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிச்சார்ட் பதியுதீன் வரவேற்றிருந்தார்.

ஆகவே இச்சலுகை நீடிக்குமா அல்லது நிறுத்தப்படுமா என்று பதட்டத்திலிருந்த அரசுக்கு றொன் கேர்க்கின் ஆறுதல் செய்தி மகிழ்வைக் கொடுத்திருக்கும். இவை தவிர பியகமவில் அமைந்திருக்கும் கொக்கோலா தொழிற்சாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட பற்றீசியா ஏ.புரெனிஸ் பசுமைத் தாம் காணவிரும்பியதாகவும் செய்திகள் வந்தன.

ஆகவே, அமெரிக்க நகர்வுகள் யாவும் சீனாவின் முதலீட்டு மற்றும் கேந்திர நலன்களை இலங்கையில் எவ்வாறு மட்டுப்படுத்துவது என்கின்ற வகையில் அமைவதைக் காணலாம்.

இந்நிலையில் மனித உரிமை மீறல் என்கின்ற சர்வதேச பிரம்பை உயர்த்தியவாறு தனது நலனை சாதிக்க முனையும் அதேவேளை சிங்களத்தோடு குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நல்லிணக்கம் ஒன்றினை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்கிற அறிவுரைகளை கூட்டமைப்பிற்கும் உலகத் தமிழர் பேரவைக்கும் கூற அமெரிக்கா முற்படுவதுபோலத் தெரிகிறது.

தென்னாபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட நல்லிணக்கத் திட்டங்களையும் அதன் அனுபவங்களையும் இலங்கைப் பிரச்சினையோடு பொருத்திப் பார்த்து ஒருவிதமான சமரசத்தினை ஏற்படுத்திவிடலாம் என சிலர் கற்பிதம் கொள்கின்றார்கள்.

ஆனாலும், சீனா என்கிற ஆசியாவின் பெரும் சக்தியை தனது நிரந்தர நண்பனாக வைத்திருக்கும் பௌத்த சிங்களப் பேரினவாதம் காணி, காவற்துறை அதிகாரம் கொண்ட மாகாணசபைத் தீர்வினைக்கூட தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப் போவதில்லை என்பதை அவர்களின் அண்மைக்கால வாக்கு மூலங்கள் உணர்த்துகின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால், 13வது திருத்தச்சட்டத்திலுள்ள காணி, காவற்துறை மற்றும் நிதி குறித்தான அதிகாரங்களின் தலைமையாளராக, அதைக்கட்டுப்படுத்தும் சக்தியாக, 13வது திருத்தச் சட்டத்தினூடக எல்லாம்வல்ல ஜனாதிபதி ராஜபக்சவே இருக்கிறார் என்பதை நல்லிணக்கம் பற்றிப்பேசும் புலம்பெயர் அமைப்புகளின் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே, அமெரிக்காவை விட்டால் வேறு வழியென்ன என்று அரசியல் மேதாவிகள்போல் கேள்வி எழுப்புபவர்கள், நிலத்திற்காக இன்னும் போராடும் தாயக மக்களிடமிருந்து இக்கேள்விக்கான பதிலைப்பெற்றுக்கொள்ளலாம்.

அண்மையில் நிகழ்ந்த தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் உலகத்தமிழர் பேரவையானது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தமிழீழ மக்கள் பேரவை மற்றும் கூட்டமைப்போடு பேசிக்கொண்டிருப்பதாகவும் அவர்களோடு பொதுக்கருத்தொன்று எட்டப்பட்டவுடன் சர்வதேசப் பிரகடனம் ஒன்று விரைவில் வெளியிடப்படும் என்று இமானுவல் அடிகளார் கூறியிருந்தார்.

இருப்பினும் முதல்படியாக அதிகாரமற்ற மாகாண சபையை ஏற்றுக்கொண்டு அமெரிக்க-இந்திய உதவியோடு மேலும் பல படிகளில் ஏறிச் செல்லலாம் என்கிற கதையாடல்களை விடுத்து, தாயக தமிழ் பேசும் மக்கள், தமிழ்நாட்டில் வாழும் இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் ஈழ மக்கள் அனைவரையும் இணைத்து அவர்கள் விரும்பும் அரசியல் தீர்வு என்ன என்பதற்கான பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்கிற சர்வதேச பிரகடனத்தை முன்வைத்தால் சிறப்பாக இருக்கும்.

# பாவித்த பின் வீசப்படும் பொருட்களே நுளம்பு பெருக்கத்திற்கு காரணம்

உணவு தயாரிப்பதற்கு யோகட் ஐஸ்கிரீம், மாஜரின் மற்றும் சிறிய கொள்கலன்களில் அடைக்கப்பட்ட பானங்கள் போன்றவற்றை பயன்படுத்திய பின்னர் அவை உள்ளடக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் கோப்பைகளும் கொள்கலன்களும் நுளம்புகள் பல்கிப் பெருகுவதற்கான முக்கிய இடங்களாக திகழ்வது கண்டறியப்பட்டுள்ளது.

நுளம்பு பெருக்கம் தொடர்பாக கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை நடத்தப்பட்ட நுளம்பு குடம்பிகள் குறித்த ஆய்விலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வில் மேற்படி பொருட்கள் மூலம் 67 சதவீதமான நுளம்புகள் வட மேல் மாகாணத்திலேயே பல்கிப் பெருகுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம் இப்பொருட்கள் மூலம் வட மாகாணத்தில் 29 சதவீதமாகவும் மத்திய மாகாணத்தில் 50 சதவீதமாகவும் மேல் மாகாணத்தில் 49 சதவீதமாகவும் தென் மாகாணத்தில் 24 சதவீதமாகவும் சப்ரகமுவ மாகாணத்தில் 50 சதவீதமாகவும் கிழக்கு மாகாணத்தில் 43 சதவீதமாகவும் வடமத்திய மாகாணத்தில் 56 சதவீதமாகவும் ஊவா மாகாணத்தில் 30 சதவீதமாகவும் நுளம்பு பெருக்கம் காணப்படுவதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உணவு தயாரிப்பதற்கு யோகட் ஐஸ்கிரீம், மாஜரின் மற்றும் சிறிய கொள்கலன்களில் அடைக்கப்பட்ட பானங்கள் என்பவற்றை பயன்படுத்திய பின்னர் அவை உள்ளடக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் பொருட்கள் நுளம்புகள் பல்கிப் பெருகுவதற்கான முக்கிய இடங்களாக விளங்குவதால் டெங்கு ஒழிப்பு பணிகளை தேசிய மட்டத்தில் செயற்படுத்திய போதிலும் நுளம்பு பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நுளம்புகள் பெருக முடியாத மாற்று வழிமுறைகளை கைக்கொள்ளுமாறு உணவு தயாரிப்பாளர்களிடம் சுகாதார அமைச்சு கேட்டுள்ளது. (அ-2)

# செட்டிகுள கோட்டத்தின் மாலைகட்டுதல் போட்டி முடிபுகள்

(பூந்தோட்டம்)

செட்டிகுளம் கோட்ட ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட மாலை கட்டுதல் போட்டி முடிபுகள் வெளியாகியுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**தரம் 1**

பா.கோபிநாத் (பாவற்குளம் கலைமகள் வித்தி), சி.யுவேந்தன் (கற்காரங்குளம் இளங்கோ வித்தி), கி.விதுசாலினி (கல்லாறு சித்தி விநாயகர் வித்தி)

**தரம் 2**

பா.ஜெனிஸ் (அல்காமிய முஸ்லிம் வித்தி), பு.சாரூபன் (செட்டிகுளம் மகா வித்தி), ரா.அனோஜன் (கற்காரங்குளம் இளங்கோ வித்தி

**தரம் 3**

பே.கிருஜா (கற்காரங்குளம் இளங்கோ வித்தி), ச.சன்சிகா (பாவற்குளம் படிவம் 3 பாடசாலை), ஜெ.டனுஜன் (பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தி

**தரம் 4**

அ.ரிலக்சன் (முகத்தான் குளம் அ.த.க.பா), சா.நிதர்சன் (பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தி, றி.நிக்காஸ் (தாருஸ்உலூம் முஸ்லிம் வித்தி

**தரம் 5**

ம.தபேசனா (பாவற்குளம் படிவம் 3 பாடசாலை), ஐ.டினோஜன் (பாவற்குளம் கலைமகள் வித்தி), சி.துலக்சனா (கல்லாறு சித்தி விநாயகர் வித்தி (அ-2-266)

# நல்லூர் உற்சவத்தில் இந்திய பாடகர்கள்

(பூந்தோட்டம்)

யாழ்.நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு ஓகஸ்ட் மாதம் 16, 17 ஆம் திகதிகளில் தென்னிந்திய பிரபல கர்நாடக இசைப்பாடகர் உன்னிகிருஸ்ணன் ,ரி.எம்.கிருஸ்ணா மற்றும் பரத நாட்டிய கலைஞர் திருமதி அலமேலு வல்லி ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர் என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இவ்வாறு வருகை தருபவர்கள் யாழ். இந்துக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இத்தினங்களில் பிற்பகல் 2.30 மணி முதல் 5 மணிவரை பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி பட்டறையினையும் நடத்தவுள்ளனர்.

16 ஆம் திகதி பரதநாட்டியம் தொடர்பான பயிற்சி பட்டறையும் 17 ஆம் திகதி கர்நாடக இசை தொடர்பான பயிற்சி பட்டறையும் இடம் பெறவுள்ளதாகவும் 2013 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றும் இசை நடனத்தினை ஒரு பாடமாக பயிலும் மாணவர்களை இப் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு பயன்பெறுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-266)

# வெளிநாடுகளில் இருந்து வரும் மக்கள் பழைய பொருட்களை எடுத்து வரக்கூடாது

## சுங்கத் திணைக்களம் அறிவுரை

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் நாடு திரும்பும் போது பெறுமதியற்ற பழைய பொருட்களைத் தம்முடன் எடுத்து வருவதை தவிர்க்குமாறு சுங்கத் திணைக்களத்தின் பிரதி சுங்க அத்தியட்சகர் காமினி விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் சுங்கத் திணைக்களம் தெரிவிக்கையில்,

அதிக பணத்தைச் செலவிட்டு பெறுமதி குறைந்த பொருட்களை கூடிய விலையில் நாடடுக்கு கொண்டு வரும் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இவ்வாறு அதிக பணம் செலுத்தி பழைய பொருட்களைக் கொண்டு வருவதைவிட உள்ளூர் சந்தையில் குறைந்த விலையில் தரமான பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

பாவிக்கப்பட்ட மின்சாதனப் பொருட்கள் மற்றும் பாவிக்கப்பட்ட உடுதுணிகளை வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் நாட்டுக்குள் கொண்டு வரும் போது அவை நாட்டின் சுற்றாடலுக்குரிய அச்சுறுத்தலாக அமைகிறது.

பாவித்த இலத்திரனியல் கருவிகள் மூலம் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய நச்சுப் பொருட்களும் காணப்படுகின்றன.

இலவசமாகக் கிடைப்பதாலும் குறைந்த செலவில் கிடைப்பதாலுமே இவ்வாறான பாதிக்கப்பட்ட பொருட்களை வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையர்கள் நாட்டுக்கு எடுத்து வருகின்றனர்.

சுமார் ஒரு பொதியை நாட்டுக்குக் கொண்டு வந்து வீடுகளுக்கு எடுத்துச்செல்ல அண்ணளவாக 13 ஆயிரத்து 600 ரூபா செலவாகிறது.

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் நாடு திரும்பும் போது குறிப்பிட்ட அளவு பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. எனினும் எல்.சீ.டி. தொலைக் காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி போன்ற இலத்திரனியல் உபகரணங்களைக் கொண்டு வர வரி அறவிடப்படுகிறது. இந்த நிலையில் பெறுமதி குறைந்த பொருட்களைக் கொண்டு வரும் போது வீணாக வரி செலுத்த வேண்டி ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)



கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.முகாமையாளர் சம்மேளனம் நடத்திய நனோ விஞ்ஞானம் தொடர்பான கருத்தரங்கு கடந்த 4 ஆம் திகதி யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமெரிக்க டெக்சாஸ் பல்கலைக்கழக பேராசிரியர் வி.திவ்வியநாதன் உரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல்துறை பேராசிரியர் பி.ரவிராஜன் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்களையும் படத்தில் காணலாம்.

# தேர்தல்களை அமைதியாக நடத்த சர்வகட்சி செயற்பாட்டுக்குழு அமைக்கப்படும்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

மூன்று மாகாண சபைகளின் தேர்தல்களை அமைதியான முறையில் நடத்தும் நோக்கில் சர்வகட்சி செயற்பாட்டுக்குழுவை தேர்தல்கள் ஆணையாளர் விரைவில் அமைக்கவுள்ளார். வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இக்குழு அமைக்கப்படவிருப்பதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வகட்சி செயற்பாட்டுக்குழுவில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள், தேர்தல் திணைக்கள அதிகாரிகள், சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்கள், பொலிஸார் உள்ளடங்குவர்.

தேர்தல்விதி மீறல் முறைப்பாடுகளை எந்தவொரு தரப்பினரும் இக்குழுவில் முறையிடலாம். இவை குறித்து ஆராய்ந்து தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை எடுப்பார். இக்குழு தேசிய மற்றும் மாவட்ட ரீதியில் செயற்படும்.

கட்சிப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் வேட்பு மனுக்களை பிழையின்றி நிரப்புவது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் தெளிவாக விளக்கமளித்தார். கடந்த காலங்களில் பல வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை மற்றும் பல கட்சிகள் நீதிமன்றம் சென்றமை போன்ற சம்பவங்களை தவிர்ப்பதற்கான வழிமுறைகளை தேர்தல்கள் ஆணையாளர் இக்கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருந்தார்.

இம்முறை தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மாவட்ட ரீதியில் ஒரு கட்சி அலுவலகத்தையும் தேர்தல் தொகுதிகளில் தலா ஒரு கட்சி அலுவலகத்தையும் அமைக்க முடியும். வேட்பாளர்கள் தமக்கென தனியான அலுவலகங்களை அமைக்க முடியாது.

அதேநேரம் கட்சி அலுவலகங்கள், அரச காணிகள் அல்லது அரச கட்டடங்களில் அமைக்கப்படுவதை தடுக்கும் நோக்கில் கட்சி அலுவலகம் அமைக்கப்படவிருக்கும் காணி அல்லது கட்டடத்தின் உரிமையாளரிடமிருந்து தேர்தல்கள் ஆணையாளர் அனுமதிக் கடிதமொன்றையும் கோரியுள்ளார். இது இம்முறை தேர்தலில் கடைப்பிடிக்கவுள்ள புதிய நடைமுறையென்றும் பவ்ரலில் நிறைவேற்று அதிகாரி சுட்டிக்காட்டினார்.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்புகளின் விண்ணப்பம் 19 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# சர்வமத ஒன்றியத்தின் ஏற்பாட்டில் செயலமர்வு

(முல்லைத்தீவு)

நல்லிணக்கத்திற்கான வடக்கு, கிழக்கு சர்வமத ஒன்றியம் முல்லைத்தீவு ஆன்மீக அடித்தளத்தில் சமூக நல்லிணக்கம், மீள்கட்டுமானம் எனும் தலைப்பில் மதத் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நான்கு மத துறவிகளும் சமயத் தலைவர்களும் சமூக ஆர்வலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-267)



# சிறுவர் அரங்கம்

155

## பஞ்ச தந்திரக் கதைகள்

## துறவியை கொன்றால் பொன் கிடைக்கும்


வணிகன் ஒருவன் செல்வன் மிக்கவனாக இருந்து வந்தான். ஆனால் எதிர்பாராத விதமாக அவனுக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. ஆகவே அவன் ஏழையாகி விட்டான். வசதியாக செல்வச் செழிப்பில் இருந்த அவன் திடீரென்று நொடிந்து போனதால் அவன் மனத் தளர்ச்சி அடைந்தான். இனிமேல் இந்தச் சமூகத்தில் ஏழ்மை நிலையில் வாழ்வதை விடவும் தற்கொலை செய்து விடலாம் என்ற முடிபுக்கு அவன் வந்து விட்டான். ஆனால் இது பற்றி அவன் வேறு யாரிடமும் கூறவில்லை.

அன்றிரவு தன் கழிந்த காலத்தை எண்ணிய அந்த வணிகன் குழம்பிய நிலையில் தூங்க ஆரம்பித்த போது அவனுடைய கனவில் ஒரு சமணத்துறவி வந்தார். அவர் அவனுக்கு தைரியம் கூறினார். அவன் தற்கொலை செய்யும் எண்ணமுடன் இருந்தான் அல்லவா? ஆகவே அவனுடைய கனவில் தோன்றிய அவர் முதலில் சொன்னதே அவன் தற்கொலை எண்ணத்தை கைவிட்டு விட வேண்டும் என்பதுதான்.

பின்னர் அந்தத் துறவி அந்த வியாபாரியிடம் வணிகனே நீ எந்தச் சூழலிலும் ஊக்கத்தை கைவிடாதே. ஊக்கம் தான் உனக்கு உயர்வைத் தரும் என்று கூறினார்.

பின்னர் அந்தத் துறவி அவனிடம் பேசினார். வணிகனே உனக்கு முற்பிறவியின் மீது நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. இருந்தாலும் இந்த உண்மையை நான் உனக்கு சொல்லித்தான் ஆக வேண்டும். செல்வச் செழிப்பில் நீ சென்ற பிறவியில் இருந்த போது நீ ஒரு இலட்சம் பொற்காசுகளை என்னிடம் தந்து ஏழை எளியவர்களுக்கு தானம் செய்யும் படி கூறினாய். ஆனால் நான் எந்தத் தானமும் செய்யவில்லை. தர்மம் செய்யவில்லை. பொன்னாசை கொண்டிருந்தேன். அதனால் என்னுடைய முழுவதும் தங்கமாகி விட்டது. ஆனால் வெளிப்பார்வைக்குத் தான் நான் ஒரு துறவியைப் போல் உன் கண்களுக்கு மட்டுமன்றி இந்த உலகத்தாரின் கண்களுக்கும் காட்சி அளிக்கிறேன். இப்போது என்னை விட்டு பொன்னாசை அறவே நீங்கி விட்டது.

ஆனால் என் உடல் முழுவதும் பொன்னாகத் தான் இருக்கும். நாளை காலையில் இதே தோற்றத்தில் உன் வீட்டிற்கு வருவேன். நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? நான் வந்ததும் ஓங்கி என் தலையில் தடி கொண்டு தாக்க



வேண்டும். அப்போதே நான் இறந்து விடுவேன். என் உடல் முழுவதும் தங்கமாக இருப்பதால் அந்தத் தங்கத்தை கொண்டு உன் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் வாழலாம். உன்னால் தாக்கப்பட்டு நான் இறப்பதால் நானும் வீடு பேறு அடைவேன் என்று கூறிவிட்டு அந்த சமணத்துறவி மறைந்து விட்டார்.

இவ்விதம் கனவு கண்ட பின்னர் அந்த வணிகனால் தூங்க முடியவில்லை. என்ன கனவு இது. வித்தியாசமாக உள்ளதே என்று அந்த வணிகன் எண்ண ஆரம்பித்தார். ஒருவேளை கனவில் கண்ட துறவிபோல் மறுநாள் காலை ஒரு சமணத்துறவி வந்து அவரைத் தாக்க ஆரம்பித்து விபரீத விளைவுகள் ஏற்பட்டு விடக் கூடாதே என்று எண்ணி வேதனைப்பட்டார். கனவு கண்டது போன்று அதேமுகத் தோற்றமுடன் சமணத்துறவி வந்தார் என்றால் அவரைத் தாக்க வேண்டும் என்று உறுதியாக முடிபு செய்தார். பின்னர் தூங்கியும் விட்டார். மறுநாள் விடிந்ததும் காலை வேளையிலேயே முடிதிருத்து பவன் வந்து விட்டான். அவனை ஏன் வரச் சொன்னோம் என்று எண்ணி வருந்தினார். சரி நடப்பது நடக்கட்டும் என்று எண்ணி அமைதியாக இருந்தார். கனவில் கண்டது போன்று சமணத்துறவி வந்து விட்டார். ஆம் அதே தோற்றம் தான் கனவில் தோன்றிய துறவிக்கும் வந்திருக்கும். துறவிக்கும் வித்தியாசமே தெரியவில்லை. அச்சு அடையாளம் என்பார்களே அதில் ஒன்றும் எந்தவித மாற்றமே இல்லை.

கனவில் தான் சொன்னாரே தன்னைக் கட்டையால் தாக்க வேண்டும் என்று அதற்கேற்ப அந்தத் துறவி புன்னகை புரிய ஆரம்பித்தார். இவ்வாறு புன்னகை புரிவதால் பொருள் என்ன? எனவே காலத்தை வீணாக்காமல் முடி திருத்துபவன் இருக்கிறானே என்பதனையும் எண்ணாமல் அந்தத் துறவியை அவர் கனவு கண்டபடி தாக்கி விட்டார். அவ்வளவு தான். அந்தத் துறவியின் உடல் நாசமாகி விட்டது. பின்னர் முடி திருத்துபவனின் உதவியுடன் தங்கக்கட்டியை வீட்டினுள் கொண்டு வைத்தார். இந்த விடயத்தை யாரிடமும் சொல்லக்கூடாது என்று கூறியவராய் ஒரு சிறிய பாகத்தை உடைத்து அவனுக்கு கொடுத்தார். அவன் மகிழ்ச்சியுடன் சென்று விட்டான்.

தங்கக் கட்டியுடன் சென்ற அவன் எதை எதையோ எண்ணினான். நாம் ஏன் இந்தத் தொழில் செய்ய வேண்டும். நாமும் இதேபோன்று சமணத்துறவிகள் சிலரை அடித்துக் கொன்றால் தங்கக்கட்டியாக அவர்கள் உடல் மாறுமே என்று எண்ணினானே தவிர அந்த வணிகன் கண்ட கனவு பற்றித் தெரியாது. எனவே இரண்டு சமணத்துறவிகளை அவன் தேடிச் சென்று அழைத்து வந்து விருந்தளிப்பதாகக் கூறி ஒருவரை அடித்துக் கொன்று விட்டான். அடுத்தவனை அடிக்கவும் அவன் கத்த ஆரம்பித்தான். இதனால் பொது மக்கள் கூடி விட்டனர். கடைசியில் என்ன அவன் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டான்.

நீதிபதி அவனை விசாரித்த போது அந்த முடி திருத்துபவன் சம்பந்த சம்பந்தமில்லாமல் பேசுவதாக தான் அவர் முதலில் எண்ணினார். பின்னர் அவன் கூறியதை வைத்து அந்த வணிகன் அழைத்துவரப்பட்டான். அவனிடம் விசாரித்த போது அவர் தன்னுடைய முற்பிறவி பற்றியும் தன்னுடைய கனவு பற்றியும் விளக்கமாகக் கூறினார். கடைசியில் என்ன அந்த முடி திருத்துபவனை கழுவில் ஏற்றிக் கொன்றார்கள் என்று சோமசர்மா சொல்லி முடித்தார். எதையுமே ஆராயாமல் அவசரப்பட்டு அந்த முடி திருத்துபவன் செய்ததால் தான் அவனுக்கு அந்தத் தண்டனை கிடைத்தது. என்று சொல்லி முடித்தார் சோமசர்மா. அதன் பின்னர் அடுத்த கதையாக அவசரப்பட்டு கீரிப்பிள்ளை ஒன்றை சாகடித்த கதையையும் கூறினார்.

# கூட்டமைப்பை பலப்படுத்துவதன் மூலம் இராஜதந்திர போரில் வெற்றி பெறலாம்

## அரியம் எம்.பி. அறைகூவல்

(மட்டக்களப்பு)

**இலங்கையில் ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் 1974 ஆம் ஆண்டுகளில் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகள் பல இளைஞர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட ஊன்றுகோலாக இருந்தது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கவிஞர் மேராவின் மனக்காடு கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் 1974 ஆம் ஆண்டுகளில் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகள் குறிப்பாக பத்துத் தடவை பாடை வராது, சோற்றுப் பானையில் காறும் உண்டோ சும்மா வயிறு நிரப்பவோ பிறப்போமென்ற அந்தக் கவிதை அளப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்து. அதனூடாக பல இளை ஞர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட ஊன்றுகோலாக இருந்தது.

தமிழ் இலக்கியங்களில் ஆண்பால் கலைஞர்கள் பெண்பால் கலைஞர்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாக இருந்தது. சங்ககாலம் தொடக்கம் இன்று வரையும் இருபாலாரும் அளப்பெரும் சேவையாற்றியிருக்கின்றார்கள்.

ஏனைய மொழிகளுடன் நாம் ஒப்பிடுகையில் மூன்று வயதில் ஒரு கவிதையை அதாவது தோடுடைய செவியன் விடையேறியோர் என்ற தேவாரத்தை திருஞானசம்பந்தர் தமிழில் பாடி தமிழுக்கு பெருமை சேர்த்திருந்தார்.

ஆனால், இவை காலத்திற்குக் காலம் இலக்கியம் சார்ந்த கவிதைகள். அவை சார்ந்த விடயங்கள் மக்கள் மத்தியில் பலவாறான விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஆனால், இப்பொழுது வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஒரு வசனம் போடப்பட்டிருக்கின்றது. சிறைச்சாலையில் இருப்பவர்களும் மனிதர்கள்தான் என்று. ஆனால், இவ்வாறு பொருள்பட வசனத்தைப் போட்டுவிட்டு அதே சிறைக்குள் தமிழ் அரசியல் கைதிகளை படுகொலை செய்கின்ற ஒரு கேவலமான நடவடிக்கை எமது நாட்டில் இடம் பெற்றிருக்கின்றது.

அண்மையில் கூட வவுனியா சிறையில் இருந்து 21 கைதிகள் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு கடுமையான முறையில் தாக்கப்பட்டு அதனால் நிமலரூபன் என்ற அரசியல் கைதி கொழும்புக்கு மாற்றப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவ்வாறு கொலை செய்யப்பட்டவரின் அந்த உடலைக்கூட பெற்றோரிடம் கொடுக்க முடியாத ஒரு சூழலில்தான் இன்று தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது சமாதான காலமென்று அரசு கூறினாலும்கூட இந்த சமாதான காலத்தில் இவ்வாறான நாசகார நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஆகவே, இவற்றையெல்லாம் இல்லாமல் செய்ய வேண்டுமாக இருந்தால் இன்றைய இந்த நிலை என்பது 64 வருட காலத்தில் அகிம்சையாக அல்லது ஆயுதப் போராட்டமாக நடத்தி விடுதலைபெற முடியாதென்பதால் இன்று இராஜதந்திர ரீதியானதொரு போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த இராஜதந்திர போராட்டத்தில் நாங்கள் வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் அந்த வெற்றிக்காக உழைக்கின்ற அந்தச் சக்திகளுக்குப் பின்னால் அதாவது தமிழ் தேசிய கூட்டமைப்பினை பலப்படுத்துவதன் மூலம் மட்டும்தான் எமது இலக்கை அடைந்து நாம் வெற்றியீட்ட முடியும் . அதற்கு அனைவரும் கூட்டமைப்பின் பின்னால் ஒன்று திரள வேண்டும்.

எனவே, நாங்கள் மேராவின் கவிதையில் கூறப்பட்ட பல விடயங்களை உற்றுநோக்குவோமாக இருந்தால் அவைகளை அடைவதற்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை அல்லது ஒரு தீர்வைப் பெற வேண்டிய சூழ்நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

ஆகையால் இந்த விடுதலையை அடைவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினைப் பலப்படுத்தி அதன் பின்னால் நாம் அனைவரும் அணிதிரள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# போதைவஸ்து அடிமைகளுக்கு புனர்வாழ்வு நிலையம் உதயமாகும்

## நீதி அமைச்சின் செயலாளர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போதைவஸ்து பாவனையாளர்களுக்கு புனர்வாழ்வு நிலையம் அமைக்க நீதியமைச்சின் செயலாளர் கமலினி டீ சில்வா அனுமதி வழங்கியுள்ளார்.

அத்தோடு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தேசிய போதைவஸ்துக்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திருமதி லெலிசா டீ சில்வா சந்திரசேனவுக்கும் பணித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில்போதைவஸ்தின்பாவனை அதிகரித்திருப்பதையும் அது தொட ர்பிலான வழங்கு விபரங்களையும் புள்ளி விபரங்களையும் அதனால் ஏற்படுகின்ற தீய விளைவுகளையும் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா நீதியமைச்சின் செயலாளருக்கு எடுத்துரைத்ததோடு அவ்வாறானதொரு நிலையம் அமைக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தார். இதன் பயனாகவே போதைவஸ்து புனர்வாழ்வு நிலையம் ஆரம்பிக்கப் படவுள்ளது. (அ-9)

# சகோதரக் குழந்தைகளை ஒரே விடுதியில் தங்க வையுங்கள்

## ஜனாதிபதி கோரினார்

(கொழும்பு)

அநாதரவான சகோதரர் ஒருவரையும் சகோதரி ஒருவரையும் இரு வெவ்வேறு அநாதை விடுதிகளுக்கு அனுப்பி வைக்கும் நீதிமன்ற உத்தரவு பற்றிய செய்தியை அறிந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு மேற்படி சிறார்களின் விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

மேற்படி சிறார்களை ஒரே அநாதை விடுதியில் தங்க வைப்பதற்கான வசதியை ஏற்படுத்துவதற்கு நீதிமன்றத்தை கேட்டுக் கொள்ளுமாறும் சட்டமா அதிபரிடம் பணித்தார். (அ-2)

# கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளச் சந்தியிலிருந்து கஸ்தூரியார் வீதியில் முடிபடையும் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அனைத்து கடை உரிமையாளர்களுடன் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்ட கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடல் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார். (அ-9)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு மீது கூட்டமைப்புக்கு நம்பிக்கையில்லை

## சுரேஸ் எம்.பி. ஆங்கில ஊடகத்திற்கு கருத்து

(கொழும்பு)

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசினால் முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீது தமக்கு நம்பிக்கையில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் இது பற்றிக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீது நாம் நம்பிக்கை கொள்ளவில்லை. இது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை தாமதப்படுத்தும் அரசின் ஒரு உத்தியாகும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு கொள்வதா இல்லையா என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் முடிவு செய்யவில்லை.

எம்முடன் சுதந்திரமான முறையில் பேச்சுக்களை நடத்தி ஒரு தீர்வுக்கு வரமுடியாத அரசாங்கம் வடக்கு, கிழக்கு மக்களின் இனப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் ஒரு தீர்வைத் தரும் என்று எப்படி நம்ப முடியும்?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்த அரசாங்கம் விரும்பவில்லை. சுயநிர்ணய உரிமை பற்றிய முன்னைய நிலைப்பாட்டிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளது. இது மாகாணங்களுக்கும் எந்த அடிப்படையில் அதிகாரங்களைக் பகிர வேண்டும் என்பது குறித்து எமது கட்சி அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

July 2012 to December 2012

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி 28.07.2012

(கி-432)

# இந்தியாவின் உறுதியான ஆதாரங்களின் அடிப்படையில் தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ரப்பானியிடம் கிருஷ்ணா வற்புறுத்தல்

(டோக்கியோ)

**இந்தியா அளித்துள்ள உறுதியான ஆதாரங்களின் அடிப்படையில் மும்பை தாக்குதல் தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ரப்பானியிடம் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி எஸ். எம். கிருஷ்ணா வற்புறுத்தியுள்ளார்.**



ஆப்கானிஸ்தானில் தலிபான்களை ஒடுக்குவதற்காக முகாமிட்டு உள்ள சர்வதேச (நேட்டோ) படைகள் 2014 ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேற முடிவு செய்துள்ளது. அதன் பின் தலிபான்கள் மீண்டும் அட்டகாசம் செய்யாமல் தடுக்கும் வகையிலும் அந்த நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கு வழிகாட்டும் வகையிலும் சர்வதேச நன்கொடையாளர் நாடுகள், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கூடி நேற்று முன்தினம் விவாதித்தன.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட மத்திய ளியுறவுத்துறை மந்திரி எஸ். எம். கிருஸ்ணா, பாகிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரி ஹினா ரப்பானி ஆகியோர் மாநாட்டின் இடையே தனியாக சந்தித்து பேசியுள்ளனர். அவர்களது சந்திப்பு 30 நிமிடங்கள் நீடித்தது.

அப்போது மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தானில் உள்ளனர். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா மீண்டும் மீண்டும் பாகிஸ்தானை வலியுறுத்தி வருகின்றது.

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பற்றிய உறுதியான மேலும் பல ஆதாரங்களையும் இந்தியா சமீபத்தில் அளித்துள்ளது. அவற்றின் அடிப்படையில் அந்த தீவிரவாதிகளை நீதியின் முன் நிறுத்த பாகிஸ்தான் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஹினா ரப்பானியிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தீவிரவாதம், பயங்கரவாதம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டால் தான் இந்தியா- பாகிஸ்தான் நாடுகளிடையே நல்லுறவும் சுமுகமான, இயல்பான சூழ்நிலையும் உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாத இயக்கமான லஷ்கர் இ தொய்பா நிறுவுனர் ஹபீஸ் சயீது தொடர்ந்து இந்தியா மீது விஷம் கலந்த கருத்துக்களை பரப்பி வருகின்றார். இந்தியாவுக்கு எதிரான அவ ரது அவதூறு பிரசாரத்துக்கு முற்றுப் புள்ளி வையுங்கள் என்றும் எஸ். எம். கிருஷ்ணா வலியுறுத்தினார்.

முன்னாள் பிரதமர் யூசுப் ரசா கிலானி. இந்தியா- பாகிஸ்தான் நாடுகளிடையே நல்லுறவை வலுப்படுத்த வேண்டும் என்று உறுதி கொண்டு இருந்தார். அதன்படி செயற்பட புதிய பிரதமரும் உறுதியுடன் இருக்கின்றார் என்று எஸ். எம். கிருஷ்ணாவிடம் ஹினா ரப்பானி இதன்போது எடுத்துரைத்தார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் எஸ். எம். கிருஷ்ணா பாகிஸ்தான் செல்ல இருக்கின்றார். அவரது சுற்றுப் பயணம் குறித்தும் இவருவரும் ஆலோசனை நடத்தினார்கள். (அ-2)

# லிபியா தேர்தல் ஒரு மைல் கல்

## ஒபாமா பெருமிதம்



சர்வாதிகாரி கடாபி வீழ்த்தப்பட்ட நிலையில் லிபியாவில் கடந்த 60 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக நியாயமான பொதுத் தேர்தல் நடைபெற்றுள்ளது.

இதில் 60 சதவீத வாக்குகள் பதிவாகின.

இந்த தேர்தல் லிபிய ஜனநாயகத்தில் ஒரு மைல்கல் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வர்ணித்துள்ளார்.

லிபியாவின் எதிர்காலம், லிபிய மக்களிடம்தான் என்பதை இந்த தேர்தல் உணர்த்துவதாகவும் புதிய லிபிய அரசுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# சீனக்கடல் தீவுகள் குறித்து ஜப்பானை எச்சரிக்கும் சீனா

கிழக்கு சீன கடல் பகுதியில் அதிகளவு தீவுகளில் எரிவாயு வளம் நிரம்பி இருப்பதால் அவற்றின் மீது சீனா, ஜப்பான் உட்பட பல நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன.

அந்த தீவுகளை விலைக்கு வாங் குவது பற்றி பரிசீலிப்போம் என்ற ஜப்பான் பிரதமர் யோஷிகிகோ நோடா அண்மையில் அறிவித்தார்.

இதற்கு சீன வெளிவிவகாரத்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அந்த தீவுகள் பல ஆண்டுகளாக சீனாவுக்குச் சொந்தமானவை. அதன் மீதான இறையாண்மை உரிமையைப் பாதுகாக்க நாங்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுப்போம். தீவுகளை யாரும் வாங்கவோ, விற்கவோ அனுமதிக்க மாட்டோம் என்று கூறப்பட்டுள்ளது. (அ-2)

# வெப்பத்தின் தாக்கம் தாங்க முடியாமல் அமெரிக்காவில் முப்பது பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக இது வரையில் 30 பேர் பலியாகினர். தற்போது அமெரிக்காவில் உள்ள பெரும்பாலான நகரங்களில் வரலாறு காணாத கடும் வெப்பம் நிலவுகின்றது.

குறிப்பாக பிலாா்ட்லாயா, வோஷிங்டன், செயின்ட் லூயிஸ், இன்டியானா பொலிஷ், லூயிஸ்வில்லே, கென்டக்கி. உள்ளிட்ட பெரும்பாலான நகரங்களில் வெப்பம் 104 டிகிரியை தாண்டியுள்ளது.

இங்குள்ள பல பகுதிகளில் கடுமையான வெப்பக்காற்று வீசுகின்றது. இதனால் அங்கு குளிர்ச்சியான சூழ்நிலை இல்லை.

நியூஜெர்சியிலும் இதே நிலை நீடிக்கின்றது. இதனால் இங்கு மட்டும் 70 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு வீசும் கடுமையான வெப்பக்காற்றில் இருந்து விடுபட மக்கள் நீச்சல் குளங்களை நாடுகின்றனர். இதனால் அங்கு வழக்கத்தை விட கூட்டம் அலை மோதுகின்றது.

வீடுகளில் உள்ள எயர்கூலர்கள் மற்றும் ஏ.சி. அடங்கிய அறைகளில் முடங்கிக் கிடக்கின்றனர்.

தகிக்கும் கடுமையான வெப்பத்தை தாங்க முடியாமல் அமெரிக்காவில் இதுவரை 30 பேர் பலியாகியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பச்சிளம் குழந்தைகள் ஆவர். (அ-2)

# பாக். கண்ணிவெடியில் சிக்கி 14 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தோபா அசாக் காய் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் பயணிகள் வாகனம் சென்று கொண்டிருந்தது.

அப்போது அந்த வாகனம் வீதியில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்கி வெடித்து சிதறியது. இதில் பயணித்த 2 குழந்தைகள் மற்றும் 3 பெண்கள் உட்பட 14 பேர் உடல் சிதறி பலியாகினர்.

7 பேர் படுகாயம் அடைந்தனர். பாகிஸ்தான் நாட்டின் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் பர்வேஸ் அஷ்ரப் இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ-2)

# ரஷ்யாவின் வெள்ளப் பாதிப்பை விளாடிமிர் புடின் பார்வையிட்டார்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள பயங்கர வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது. ரஷ்யாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள கிராஸ் நோடார் மாகாணத்தில் கடந்த 6 ஆம் திகதி திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் அந்த மாகாணத்தில் உள்ள பல்வேறு நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின. மேலும் க்ரிம்ஸ்க் நகரமும் அதைச் சுற்றியுள்ள மாகாணங்களும் வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டன. எங்கு பார்த்தாலும் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றது.

இது தவிர கெலெண்ட்சிக் உள்ளிட்ட நகரங்களில் வெள்ளத்துக்கு மேலும் பலர் பலியானதால் இறந்தவர்களின் எண்ணிக்கை 171 ஆக உணர்ந்துள்ளது.

மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால் இந்த எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பொலிஸ் செய்தித் தொடர்பாளர் இவான் செங்கவரோவ் தெரிவித்தார். வெள்ளத்தைத் தொடர்ந்து 27 ஆயிரம் பேர் வீடுவாசல் இன்றித் தவிக்கின்றனர்.

இந்நிலையில் வெள்ளத்தால் மோசமாகப் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடந்த சனிக்கிழமை மாலையில் நேரில் பூர்வையிட்டார். வீடுகளில் இரவு நேரத்தில் தூங்கிக் கொண்டிருந்த மக்களை மூழ்கடித்த வெள்ள நீரின் சக்தி சுனாமி போல் இருந்ததாக அவர் தெரிவித்தார். (அ-2)

# 98 சுற்றுலாத்தலங்களை சுகாதாரம் நிறைந்த பகுதியாக மாற்ற முடிவு

(புதுடில்லி)

தாஜ்மகால், டில்லி செங்கோட்டை, இந்தியா கேட், காஷ்மீர் தால் ஏரி, உட்பட 98 சுற்றுலாத் தலங்களை சுத்தம் மற்றும் சுகாதாரம் நிறைந்த பகுதிகளாக மாற்ற மத்திய சுற்றுலாத்துறை முடிவு செய்துள்ளது.

பல்வேறு நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு 60 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் தற்போது வருகின்றனர்.

இதை இரு மடங்காக அதிகரிக்க மத்திய சுற்றுலாத்துறை முடிபு செய்துள்ளது. இது குறித்து மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் கூறுகையில்,

இவ்வாண்டியில் இரு திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. முதல் திட்டம் நம் நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிப்பது, இரண்டாவது நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு தரமான சேவைகளை வழங்குவது என்பதாகும்.

இதன்படி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வரும் இடங்களில் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவது, அப்பகுதிகளில் சுகாதாரம் நிறைந்த சூழலை உருவாக்குவது, 24 மணி நேரமும் அப்பகுதிளை சுத்தமாக வைத்திருப்பது, வாகனங்கள் நிறுத்துமிடம், கழிவறைகளின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வது ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

தலைநகர் டில்லியில் இந்தியா கேட், கன்னாட் பிளேஸ், சாந்தினி சவுக், தாமரை கோவில், ஜந்தர்மந்தர், ராஜ்காட் புரானா குல்லா, சப்தர்ஜங் டோம்ப் என 14 சுற்றுலாத் தலங்கள் உள்ளன. இவை தவிர ஆக்ராவில் தாஜ்மகால், காஷ்மீரில் தால் ஏரி, ஒரிசாவில் கோனார்க், கேரளாவில் கோவளம் கடற்கரை என 98 பகுதிகள் உள்ளன. (அ-2)

எறும்பைப் போல் உபதேசிப்பவர் யாரும் இல்லை.
ஆனால் அது பேசுவதே கிடையாது.
-ஃப்ராங்க்லின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எங்கள் இனத்தை வீழ்த்தும் ஊர் மாட்டுக் கலாசாரம்

ஊர் மாட்டுக் கலாசாரம் பற்றி இவ்விடத்தில் கூறும் போது, என்ன? ஊர் மாட்டுக்கென்றும் ஒரு கலாசாரம் உண்டா?என்று நீங்கள் கேட்கலாம்.

ஊர் மாடுகளுக்கு வாளியில் அல்லது அண்டாவில் தண்ணீர் வைத்தால், ஒரு மாடு குடித்த தண்ணீரை மற்றைய மாடு குடிக்க மாட்டாது.

எவ்வளவுதான் தாகம் இருந்தாலும் ஒரு மாடு குடித்த தண்ணீரை மற்றைய மாடு குடிக்க மாட்டாதென்பது எந்த ஜீவராசிகளிடமும் இல்லாத கலாசாரம் என்று கூறலாம்.

தன் கன்று குடித்த தண்ணீரை தாய்ப் பசு கூட குடிக்காது என்பதை நினைக்கும் போது, ஏன்தான் இப்படியொரு கொடுமை!

'அம்மா' என்ற தமிழ் மொழியின் அகரத்தை மாடுகளும் உச்சரிப்பதனால் அப்படி ஒரு ஒற்றுமையீனமோ என்று நினைக்கும் அளவிற்கு ஊர் மாட்டுக் கலாசாரம் தொடர்கிறது.

வாளியில்,அண்டாவில் தண்ணீர் வைக்கும் போது ஒரு மாடு குடித்த தண்ணீரை இன்னொரு மாடு குடிக்காத போதிலும் குளத்தில் தண்ணீர் குடிக்கும் போது எல்லா ஊர் மாடுகளும் தண்ணீர் குடிக்கச் சென்றாலும்,

அங்கு தண்ணீர் குடிக்க விடாமல் மாடுகள் ஒன்றையொன்று இடிபடுவது வழக்கமான கலாசாரம் ஆகும்.

இந்த கலாசாரத்தைப் பற்றி இவ்விடத்தில் பேச வேண்டியதன் அவசியம் என்ன? இப்படி நீங்கள் கேட்டால், ஊர் மாட்டுக் கலாசாரத்துக்கும் எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளுக்கும் இடையே நிறையவே தொடர்பு உண்டு.

எங்கள் தமிழ் மக்களுக்கு எவ்வளவுதான் பிரச்சினை இருந்தாலும் எங்களிடம் ஒற்றுமை ஏற்படவே மாட்டாது.

வன்னிப் போரின்போது தமிழ் மக்கள் அனுபவித்த துயரம் ஒரு வகை. போருக்குப் பின் இப்போது தமிழ் மக்கள் படும் அவலம் இன்னொரு வகை.

சுருங்கக் கூறின் இலங்கை அரசு வெளிப்படையாகவே தமிழினத்திற்கு எதிரான –மோசமான செயற்பாடுகளை அரங்கேற்றி வருகின்றது.

எனினும் இது பற்றி எங்களின் அரசியல் தரப்புக்கள் விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருப்பது மிகப் பெரும் துரதிர்ஷ்டம் ஆகும்.

இத் துரதிர்ஷ்டம் தொடருமாக இருந்தால் அவர்,இவர் என்ற வேறுபாடின்றி ஒட்டு மொத்தமாக தமிழினமும் மிக மோசமான ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிவரும்.

அப்போது யார் ஒற்றுமைப்பட நினைத்தாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது.

எனவே தமிழ்த் தரப்புக்கள் யார் எந்தப் பக்கம் நின்றாலும் பரவாயில்லை. தமிழினம், தமிழர்கள் என்ற அடிப்படையில் எங்கள் உரிமையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் சகல தமிழ் அரசியல் தரப்புகளும் ஒற்றிணைந்து எங்களுக்கான தீர்வை வரையறுத்துக் கொண்டு,

இதுதான் தீர்வு இதைத் தர முடியுமா? என்று அரசிடம் கேட்க வேண்டும். இதை விடுத்து ஊர் மாட்டுக் கலாசாரத்தை தமிழ் அரசியல் தரப்புக்கள் கடைபிடித்தால், நிலைமை மோசமாகும். கவனம்.

# தேர்தல் சட்டத்தை மீறுவோர் மீது உடனடி நடவடிக்கை

## பொலிஸார் எச்சரிக்கை

மாகாண சபைத் தேர்தலில் தேர்தல் சட்டங்களை மீறுவோர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ள போஸ்டர் மற்றும் கட் அவுட்களைக் காட்சிப்படுத்தும் வேட்பாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதுடன் மாகாண சபை சட்டத்திற்கு அமைய தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் போஸ்டர் காட்சிப்படுத்தும் வேட்பாளரை பிடியாணை இல்லாமல் கைது செய்யவும் முடியும்.

எனவே மாகாண சபைத் தேர்தல் சட்டவிதிகளை மீறும் வேட்பாளர்கள் குறித்த இடத்திலேயே கைது செய்யப்படுவர் எனவும் தேர்தலில் சட்டத்தை நிலை நாட்டத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## சட்டங்களால் மட்டும் சமூகத்தை சீரமைக்க முடியாது- நாமல் எம்.பி

சட்டங்களை கடுமையாக்கி சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் மாத்திரம் சமூகத்திலும் நாட்டிலும் ஒழுக்கத்தை மேம்படுத்த முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள 2 ஆயிரத்து 600 ஞாயிறு பௌத்த நெறி பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு தங்காலையில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இவ்வாரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாமல் ராஜபக்ஷ எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முதல் கட்ட உதவி வழங்கும் திட்டத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள 100 பாடசாலைகளுக்கான நிதியுதவியை சமல் ராஜபக்ஷ வழங்கி வைத்தார்.

பத்திரிகைகளை நாளாந்தம் பார்க்கும் போது எமது சமூகத்தின் மீது எமக்கே கவலை ஏற்படுகிறது. இதனை நிவர்த்தி செய்வதற்கு பெரியவர்கள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து நல்லொழுக்கக்கத்தை கற்பிக்க வேண்டும் என்றார். (அ-2)

## முறையற்ற பசளைப் பாவனையால் மண்ணில் நச்சுப்பொருட்கள் சேர்கின்றன

### தேசிய மட்ட ஆய்வில் தகவல்

சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார ஸ்தாபனம் என்பவை இணைந்து மேற்கொண்ட சிறுநீரகநோய் தொடர்பான தேசிய மட்ட ஆய்வு நிகழ்ச்சித்திட்ட தகவல்களின் பிரகாரம் வடமத்திய மாகாணத்தின் சனத்தொகையில் 15 வீதமானோர் நாட்பட்ட சிறுநீரக நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாய்வுத் தகவல்களின் படி நாட்பட்ட சிறுநீரக நோய்களுக்குக் காரணமாக இருப்பது கன உலோகப் பொருட்கள் உடலில் சேர்வதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

கட்மியம் மற்றும் ஆசனிக் போன்ற கன உலோகப் பொருட்கள் உட்கொள்ளும் உணவுகள் மற்றும் மாசடைந்த வளியினூடாக உடலைச் சென்றடைகின்றது எனவும் இந்நோய் அதிகரிப்புக்கு நீர் முக்கிய காரணமாக இல்லை. இருப்பினும் தரமான குடிநீரை வழங்குவதன் மூலம் கன உலோகப் பொருட்கள் உடலினுள் செல்வதைக் குறைக்க முடியுமெனவும் அத்தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முறையற்ற பசளைப் பாவனையைத் தடுப்பதன்மூலம் மண்ணில் நச்சுப் பொருட்கள் சேர்வதைக் குறைக்கமுடியுமெனவும் உடலினுள் இத்தகைய கன உலோகப் பொருட்கள் செல்வதைத்தடுப்பதனூடாக இந்நோய் அதிகரிப்பிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்பட்ட சிறுநீரக நோய்த்தாக்கத்தினால் 51.7 வீதமான ஆண்களும் 68.3 வீதமான பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 45 முதல் 69 வயது பிரிவினரில் 68.43 வீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழமுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் நாளை புதன்கிழமை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப்பிரதேசம் அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வாகன விபத்தினால் இளைஞன் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதி

இ.போ.ச பேருந்தும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் டிப்பர் வாகன சாரதி படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் ஆவரங்கால் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அச்சுவேலியைச் சேர்ந்த குணதாஸ் திவாகரன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த சிறியரக டிப்பர் யாழிலிருந்து அச்சுவேலி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பருத்தித்துறையில் இருந்து யாழ்.நோக்கிபயணிகளோடுவந்துகொண்டிருந்த இ.போ.ச. பேருந்தும் நேரு க்கு நேர் மோதியுள்ளது. இதில் சிறிய ரக டிப்பர் வாகனம் தூக்கிவீசப்பட்டதில் சாரதி அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்துச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ-4-10)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### வாழ்க்கை



இந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டே பரிசுத்தத்தை எப்படி அடைவது? நாம் எல்லோரும் காட்டிலுள்ள குகைகளுக்குப் போவோமா? அதனால் என்ன நன்மை வந்துவிடும்? மனம் கட்டுப்பாட்டிற்குள் இல்லாவிட்டால் குகையில் வாழ்வதில் எந்தப்பயனும் இல்லை.

அதேமனம் எல்லாத் தொந்தரவுகளையும் அங்கேயும் கொண்டு வரும். குகையில் இருபது பேய்களைப் பார்ப்பீர்கள். ஏனெனில் எல்லாப் பேய்களும் மனதில்தான் உள்ளன.

மனம் கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் குகையை எங்கு வேண்டுமானாலும் கொண்டுவரலாம்; நாம் இருக்கும் இடத்திலேயே அந்தச்சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளலாம்.

உலகம் தமக்கு எப்படித் தோன்றுகிறது என்பது நமது மனப்பான்மையைப் பொறுத்தது. நமது எண்ணங்களே பொருட்களை அழகானவை ஆக்குகின்றன. அவற்றை விகாரமானவை ஆக்குவதும் நம் எண்ணங்களே.

# அவுஸ்திரேலிய தொடரை வென்றது இங்கிலாந்து





இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையிலான 4 ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

மீண்டும் சிறப்பான சகலதுறைப் பெறுபேற்றை வெளிப்படுத்திய இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. றிவர் சைட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் அலஸ்ரெயர் குக் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. முதலிரண்டு விக்கெட்டுக்களையும் 6 ஓட்டங்களுக்கு இழந்த அவ்வணி அதன் பின்னர் ஷேன் வொற்சன், மைக்கல் கிளார்க் ஆகியோரின் இணைப்பாட்டம் காரணமாக ஒரு கட்டத்தில் 57 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து காணப்பட்டது.

எனினும் ஷேன் வொற்சன் ஆட்டமிழந்த பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்த அவுஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எனினும் டேவிட் ஹசி பின்வரிசை வீரர்களுடன் இணைந்து அவுஸ்திரேலிய அணி 200 ஓட்டங்களைப் பெற உதவினார். துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் ஹசி 73 பந்துகளில் 70 ஓட்டங்களையும் மைக்கல் கிளார்க் 43 ஓட்டங்களையும் ஷேன் வொற்சன் 54 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பிரட் லீ 41 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்டீவன் ஃபின் 4 விக்கெட்டுக்களையும் ஜேம்ஸ் அண்டர்சன், ரிம் பிரெஸ்னன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் ரவி போப்பாரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 201 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 47.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவ்வணி சார்பாக சிறந்ததொரு ஆரம்பம் பெற்றுக் கொள்ளப்பட தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பாக ஆடி வெற்றியை உறுதி செய்தனர். துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக இயன் பெல் 94 பந்துகளில் 69 ஓட்டங்களையும் ஜொனதன் ட்ரொட் 102 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் ரவி போப்பாரா 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் அலஸ்ரெயர் குக் 46 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக கிளி ... ன்ட் மக்காய் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் நாயக ... னாக இங்கிலாந்தின் ஸ்டீவன் ஃபின் தெரிவான அதேவேளை 5 போட்டிகள் கொண்ட இத்தொ... டரில் 4 போட்டிகளின் நிறைவில் ஒரு போட்டி மழையால் இரத்தான நிலையில் இங்கிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.




## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியன்



மக்கள் வங்கியின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 21 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயதரப்பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதின.

போட்டி விறுவிறுப்பாக இருந்தாலும் இறுதி வரை மைதானத்தில் யூனியன் கல்லூரியின் கைகளே மேலோங்கிக் காணப்பட்டன.

முதல் பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 23:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யூனியன் கல்லூரியின் கைகளே மீண்டும் ஆதிக்கம் செலுத்தின.

இந்நிலையில் இரு அணிகளும் மோதிக்கொண்ட போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யூனியன் கல்லூரி 19:09 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 42:19 புள்ளி என்ற அடிப்படையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியை வெற்றி பெற்று யாழ்.மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரின்போது இலங்கை தேசிய அணிக்கு தலைமைதாங்கிய ஜெயந்தி சோமசேகரமும் அதிதியாக கலந்துகொண்டு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.


## பருத்தித்துறையில் ஒலிம்பிக் தீபம்

சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு ஒலிம்பிக் தீபம் சனிக்கிழமை காலை பருத்தித்துறை முனையில் இருந்து எடுத்துவரப்பட்டு தொடர்ந்து தென்னிலங்கை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச இளைஞர், யுவதிகளினால் கொண்டு செல்லப்பட்ட ஒலிம்பிக் தீபம் கோப்பாய் பிரதேச எல்லையில் வைத்து கோப்பாய் பிரதேச வீரர்களிடம் கையளிக்கப்பட்டுப் பின் யாழ்ப்பாண வீரர்களிடம் கையளிக்கப்பட்டது. யாழ். வீரர்களிடமிருந்து சாவகச்சேரி வீரர்களுக்கு கையளிக்கப்பட்டு கிளிநொச்சி பகுதிக்கு ஒலிம்பிக் தீபம் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்நிகழ்வில் பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மகேஸ், வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பிரதிப் பணிப்பாளர் ஈஸ்வரராஜா உட்பட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர்களும் கலந்து கொண்டனர்.






வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட 15 வயது பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் கனகரத்தினம் மகா வித்தியாலத்தில் நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தினை யா/ அராலி சரஸ்வதி வித்தியாலயமும் இரண்டாம் இடத்தினை யா/ பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாலயமும் மூன்றாம் இடத்தினை யா/ இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. வெற்றியாளர்களுடன் வடமாகாண கல்வி விளையாட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் காணப்படுவதனை படங்களில் காணலாம்.

(படங்கள்:-மல்லாவிச் செய்தியாளர்)

# என்னை மட்டும் குறி வைப்பது ஏன்?

## கங்குலி ஆதங்கம்




ஐ.பி.எல். போட்டியில் என்னைமட்டும் குறிவைத்து தவறாக பேசுவது ஏன்? என சௌரவ் கங்குலி தனது பிறந்தநாள் விழாவில் ஆதங்கப்பட்டுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி நேற்று முன்தினம் தனது 40ஆவது வயதில் அடியெடுத்து வைத்தார்.

இவர் தனது பிறந்தநாளை ரசிகர்களுடன் சேர்ந்து கேக் வெட்டிக் கொண்டாடினார். இதைத் தொடர்ந்து அவர் அளித்த பேட்டியில், என்னுடைய வாழ்க்கையில் இதுவரையில் நல்ல விடயங்கள் நிறைய நடந்துள்ளன.

இனிவரும் வாழ்நாளும் நல்ல நினைவுகளோடு அமைய வேண்டும் என வேண்டுகிறேன். 40 வயது என்பதை ஏதோ வாழ்க்கையின் ஒருகட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்திற்கு செல்வதைப்போல் செல்லுகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் 40 என்பது வெறும் இலக்கம் மட்டுமே 40 வயது பெரிய விடயமல்ல. இது என்னுடைய வாழ்க்கையில் எந்தமாற்றத்தையும் ஏற்படுத்தாது.

அடுத்த ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவேனா? என்பதை தற்போதைக்கு உறுதியாக கூறமுடியாது. வெற்றியும் தோல்வியும் மனிதனாக பிறந்த அனைவருக்கும் நடக்கக் கூடியது.

ஆனால் ஐ.பி.எல். சீசன் 5 இல் புனே வாரியஸ் அணி சிறப்பாக செயல்படாததால் தலைவரான என்மீது குறை கூறுகிறார்கள் ஐ.பி.எல். போட்டிகளில் எத்தனையோ தலைவர்கள் சோபிக்கத் தவறியிருக்கிறார்கள். ஆனால் என்னை மட்டுமே தலைப்புச் செய்தியாக போட்டு தவறாகப் பேசுவது ஏன் என்று தெரியவில்லை.

2003 உலகக்கிண்ண தொடரை என் வாழ்க்கையின் மிகச்சிறந்த நினைவாக கருதுகிறேன். இந்த நல்லநாளில் சர்ச்சைக்குரிய எந்தக் கருத்தையும் தெரிவிக்க விரும்பவில்லை. அதனால் கிரேக் சப்பலுடனான கருத்து வேறுபாடுபற்றி பேச விரும்பவில்லை.

தற்போது இருபது-20 போட்டிகளைத்தான் ரசிகர்களை அதிகம் விரும்புகிறார்கள் ஆனால் இருபது-20 போட்டியில் எந்த நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் இவ்வாறு அவர் கூறினார்.

இதேவேளை, சர்வதேசப் போட்டிகளிலிருந்து தான் தேவைக்கு முன்னதாகவே ஓய்வு பெற்றுவிட்டதாகவும், இன்னும் சில வருடங்கள் விளையாடியிருக்கலாம் எனவும் இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

# சச்சினின் சாதனைகளும் ஒருநாள் முறியடிக்கப்படும்

## கபில் தேவ்



இந்திய அணியின் சாதனைத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் சாதனைகள் எதிர்காலத்தில் ஒருநாள் முறியடிக்கப்படும் என இந்திய அணிக்கு முதலாவது உலகக்கிண்ணத்தை பெற்றுக்கொடுத்த தலைவரான கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

சச்சினின் சிறந்த இயல்புகளை பாராட்டிய அவர், அதன்காரணமாகவே அவர் உச்சத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தங்களது காலத்தில் தாங்கள் விளையாடும் போது சுனில் கவாஸ்கரே மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் எனவும், அவரை தாண்டி வேறு துடுப்பாட்ட வீரர்கள் வர முடியாது என எண்ணியதாகவும், ஆனால் தாங்கள் கருதியது பிழையென நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கவாஸ்கரைவிட மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார்கள் எனத் தெரிவித்த அவர் ஏனெனில் தனிப்பட்ட வீரர்களைவிட கிரிக்கெட் மிகப்பெரியது என தெரிவித்தார்.


சச்சின் தனது கிரிக்கெட்வாழ்வில் மிகச்சிறப்பாக போட்டிகளில் பங்கு பற்றியுள்ளார் எனத் தெரிவித்த கபில் தேவ், அவர் ஏராளமான சாதனைகளை தன்வசம் கொண்டுள்ளதாகவும் எனினும் அவரது சாதனைகள் ஒருநாள் முறியடிக்கப்படும் என தெரிவித்தார்.

தனது கிரிக்கெட் வாழ்வின் இறுதிப்பகுதியில் இரண்டு இளைய வீரர்களின் திறமைகள் பற்றி பெரியளவு எதிர்பார்ப்பு காணப்பட்டதாக தெரிவித்த அவர் சச்சின் டெண்டுல்கர் வினோத் காம்ப்ளி ஆகியோரே அவர்கள் என தெரிவித்தார்.

இருவரும் மிகச்சிறந்த திறமைகளை கொண்டவர்களே எனத் தெரிவித்த கபில் தேவ் தற்போது சச்சின் இருக்கும் இடத்தை பார்க்கக் கூடியதாக தெரிவித்தார்.

சச்சின் ஒழுக்கமான வாழ்வை கடைப்பிடித்ததால் இந்த உயரத்தை அடைய முடிந்ததாகவும், காம்ப்ளி ஒழுக்கமற்று காணப்பட்டதால் தனது திறமையை பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

# டெஸ்ட் தொடர்; மழையால் போட்டி நிறுத்தப்பட்டது





பாகிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடும் வேளையில் மழையால் போட்டி நிறுத்தப்பட்டுள்ளது.

பல்லேகல சர்வதேச மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கிய மூன்றாவது போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்மூலம் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

அதிகபட்சமாக ஆசாத் ஷாபிக் 10 பவுண்டரிகளுடன் 75 ஓட்டங்களும், அணித் தலைவர் மிஸ்பாஉல்ஹக் 40 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து இலங்கை அணி 226 ஓட்ட இலக்குடன் தனது முதல் இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட தொடங்கியது.

தொடக்க வீரராக களமிறங்கிய டினேஷ் சண்டிமால் 8 ஓட்டங்களும், அடுத்து களமிறங்கிய சங்கக்காரா ஓட்டமெதுமின்றியும் ஆட்டமிழந்தனர்.



அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும் 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிபில் இலங்கை அணி 3 விக்கெட் இழப்பிற்கு 44 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. மற்றொரு தொடக்க வீரரான தரங்க பரணவிதான 13 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.

இரண்டாம்நாள் ஆட்டத்தின் போட்டி தொடங்கும் முன்னரே மழைபெய்தது. தொடர்ந்து மழை நீடித்ததால் ஒரு பந்துகள் கூட வீசாத நிலையில் நேற்றைய போட்டி மழையால் நிறுத்தப்பட்டது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.


# சாம்ராஸ் சாதனையை சமன் செய்தது மகிழ்ச்சி

## ரோஜர் பெடரர்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலேயே மிகவும் புகழ்பெற்றது விம்பிள்டன் டெனிஸ் போட்டியாகும். இந்த விம்பிள்டன் பட்டத்தை பீட்சாம்ராஸ் (அமெரிக்கா) 7 முறை வென்றதே சாதனையாகவுள்ளது.

அவர் 1993-94-95-97-98-99-2000 ஆம் ஆண்டுகளில் விம்பிள்டன் பட்டத்தை வென்றிருந்தார். புல்தரையில் அவருக்கு இணையாக விளையாடுவதை தற்போது ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) நிரூபித்துள்ளார்.

3ஆம் நிலைவீரரான அவர் நேற்று முன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் 4:6, 7:5, 6:3, 6:4 என்ற செட்கணக்கில் 4ஆம் நிலை வீரராக அன்டி முர்ரேயை (இங்கிலாந்து) தோற்கடித்தார். இதன்மூலம் பெடரர் 7 ஆவது முறையா விம்பிள்டன் பட்டத்தை வென்று



சாம்ராஸின் சாதனையை சமன் செய்தார்.

2003, 2004, 2005, 2006, 2007, 2009, 2012 ஆகிய ஆண்டுகளில் பட்டம் வென்றுள்ளார். இதன்மூலம் ரோஜர் பெடரர் 17 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று டென்னிஸ் உலகின் முடிசூடா மன்னராக திகழ்கிறார். அவருக்கு அடுத்தபடியாக சாம்ராஸ் 14 கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்றுள்ளார்.

இரண்டு ஆண்டு இடைவெளிக்குப்பிறகு பெடரர் கிராண்ட்ஸ்லாம் பட்டம்பெறுகிறார். இந்த வெற்றிகுறித்து பெடரர் நிருபர்களிடம் கூறியதாவது, இந்தவெற்றியை என்னால் நம்ப இயலவில்லை. எனது ஹீரோவான சாம்ராஸின் சாதனையை சமன்செய்தது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. முதுகு வலியோடு இந்தப்போட்டியில் விளையாடினேன் இந்த வெற்றி மிகவும் சிறப்பானது. கடந்தசில ஆட்டங்களில் நான் சிறப்பாக ஆடினேன். முர்ரே இதுவரை கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெறவில்லை. எனினும் அவர் நன்றாகவே ஆடினார். இவ்வாறு பெடரர் கூறினார்.



விம்பிள்டன் டென்னிஸ் பெண்கள் இரட்டையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற அமெரிக்காவின் செரினா, வீனஸ் (வலது) வில்லியம்ஸ் சகோதரிகள்.

## இலங்கையில்...

காணாமல் போயுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய பசுபிக் வலயம் தொடர்பான 2011ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அவ்வகையில், சிவலிங்கம் சிவகுமார் என்ற தமிழ் இளைஞர் கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி கடத்தப்பட்ட சம்பவமும் பதிவாகியுள்ளது. இச்சம்பவம் இடம்பெற்று ஐந்து தினங்களின் பின்னர் அவரது சடலம் தொண்டைமானாறு பிரதேசத்தில் மீட்கப்பட்டிருந்தது.

அத்துடன் படைத்தரப்பினரால் கடந்த வருடம் கடத்தப்பட்ட மக்கள் எழுச்சி இயக்க உறுப்பினர்களான லலித், குகன் ஆகியோர் குறித்து இதுவரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை.

அத்துடன், கொலன்னாவை நகரசபைத் தலைவரை கடத்திச் செல்ல குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முயற்சித்தபோது, பிரதேச மக்களால் அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டனர். இதன்போது படைத்துறைச் செயலாளரின் பணிப்பின் பேரில் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க நேரடியாகச் சென்று அவர்களை மீட்டிருந்தார். இச்சம்பவமும் இவ்வருடத்திலேயே பதிவாகியுள்ளது.

அதேவேளை, இச்சம்பவங்கள் அனைத்திலும் காணப்படும் ஒற்றுமை என்னவெனில் இவர்கள் எவரையும் பொலிஸார் கைது செய்யவில்லை என்பதாகும் என இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் கடத்தல் சம்பவங்களுடன் படைத்தரப்பினருக்கு நேரடியாக தொடர்பு உள்ளது என அண்மையில் வெளியான ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் தொடர்பான அறிக்கையிலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## யாழ்.நிலைவரங்கள்...

பின்னரான காலப்பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் உதவிகள் தொடர்பில் கட்டளைத் தளபதி மஹிந்த கத்துருசிங்கவினால் இச் சந்திப்பின்போது எடுத்துக் கூறப்பட்டது.

இதேவேளை பிரிட்டிஷ் குழுவினர் குடாநாட்டின் பாதுகாப்பு நடைமுறைகள் பொது மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான தொடர்பு குறித்தும் கட்டளைத் தளபதியிடம் கேட்டறிந்து கொண்டனர் என பலாலி படைத் தலைமையகத்தின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்திருந்தார்.

மேலும், பிரிட்டிஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட குழுவினர் நெடுந்தீவுக்கும் விஜயத்தை மேற்கொண்டு கடற்படை அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

அத்தோடு யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேராவுடன் சந்திப்பினை மேற்கொண்டனர்.

இதன் பின்பு யாழ்.போதனா வைத்தியசாலைக்கும், யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் விஜயத்தை மேற்கொண்ட ரன்கின், மாலை 4.30 மணி தொடக்கம் 6.00 மணிவரை யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் குடாநாட்டின் நிலைவரம் குறித்தும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முதலீடுகள் குறித்தும் விரிவாக மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடினார். (ந-6)

## நிமலரூபன் சடல வழக்கு இறுதி முடிவு 2 வாரத்தில்

(கொழும்பு)

றாகம வைத்தியசாலையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதி கணேசன் நிமலரூபனின் சடலத்தை அடக்கம் செய்யும் விவகாரம் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்காக 23ஆம் திகதி வரையில் கடவத்தை நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியிருக்கிறது. (ந-8-11)

## காட்டுப்பூச்சி...

சாரந்தா காட்டுப் பகுதியில் காட்டுப்பூச்சி ஒன்று கடித்ததால் வலி மற்றும் அழற்சியால் பாதிக்கப்பட்ட இந்திய மத்திய இணை அமைச்சர் ஜெராம் ரமேஸ், கடந்த சனிக்கிழமை புதுடெல்லியில் எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போதும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அவர், நாளை மருத்துவமனையில் இருந்து தான் விடுவிக்கப்பட்டு விடுவேன் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உடல் பலவீனமாக இருப்பதை உணர்ந்தாலும் கூட, இந்திய-இலங்கை இருதரப்பு உறவுகளின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு கொழும்புக்கான பயணத்தை திட்டமிட்டபடி மேற்கொள்ளவுள்ளதாக கூறியுள்ளார்.

எனினும், அனுராதபுரத்திற்கு மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த பயணத்தை அவர் கைவிட்டுள்ளார்.

மூன்று நாள் பயணமாக இலங்கை வரும் ஜெய்ராம் ரமேஸ், கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்திலும்,பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திலும் இரண்டு விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ,சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்த ஆண்டில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் இரண்டாவது இந்திய அமைச்சர் இவராவார். இதற்கு முன்னர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8-11)

## 59 இராஜதந்திரி...

வரவேற்றார்.

51 நாடுகளில் இலங்கை அரசின் பிரதிநிதிகளாக செயற்படும் 59 தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களே இந்த விஜயத்தில் பங்குபற்றினர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மட்டு.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இத்தூதுக்குழுவினர் அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை பார்வையிட்டனர். (ந-8-11)

## மகிந்த அரசின்...

நாசமாக்கப்பட்டுள்ளது.

இப்படியான நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கம் எவ்வளவு காலத்திற்கு பயணிக்கப் போகிறார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பொது மக்களின் நிதியினை வீணாக்குவதுடன், அவர்களுக்கு பாரிய சுமையை ஏற்றும் இந்த அரசாங்கத்திற்கு, எதிர்வரும் மாகாண சபை தேர்தலின் மூலம் சிறந்த பாடத்தை புகட்ட வேண்டும். அதற்குரிய ஒத்துழைப்பினை மக்கள் எமக்கு வழங்குமாறு வேண்டுகின்றோம் என தெரிவித்துள்ளார். (ந-8,11)


**அனைவருக்கும் வேலைவாய்ப்பு**
பகுதிநேர/முழுநேர

**மாதம் ஒரு லட்சம் (Rs. 100000/=) வரை**

Data Entry, Form Filling, Facebook, Animation, Copy pasting,Print, Photoshop, C++, Java, ....300 வேலைகள் உள்ளடக்கம்.

International Master Debit Card, வேலை விளக்கம் 100% உத்தரவாதம்.

உங்கள் சுயவிபரக்கோவையைப் பூர்த்தி செய்து (தொலைபேசி எண் தெளிவாகக் குறிப்பிடவும்) 19.07.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி: S. Jegamohan, Director,
TP No: 077 3967334 ACS, Kopay Center Kopay.
(8749)


## வடமராட்சியில்...

யுத்தத்தை மேற்கொண்டு உள்ளார்கள். எம் இனத்தின் விடுதலை உணர்வைச் சிதறடிக்க எதிரியானவன் கலாசார சீர்கேடு எனும் ஆயுதத்தை பிரயோகிக்கின்றான்.இதற்கு உறுதுணையாக பல இளைஞர் யுவதிகளும் செயல்படுகின்றனர். இதற்கு எம்மவர்கள் துணை போவதே வேதனையாக உள்ளது.

இனிமேலும் எதிர்வரும் காலத்தில் இப்படியான கலாசார சீர்கேடுகள்,ஆட்கடத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள்,குழு மோதல்கள், பகிடிவதைகள் போன்றன இடம்பெறுவதற்கு அனுமதிக்க மாட்டோம். அத்துடன் அரச இராணுவ இயந்திரத்துடனும் ஒட்டுக்குழுக்களான துரோகக் கும்பலுடனும் நட்பை வளர்த்துக்கொண்டு உளவு சொல்பவர்களும் சமூக விரோதிகளும் அவர்களுக்கு துணை நிற்பவர்களும் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று அந்த துண்டுப்பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-8)

## இறுதிப்போரில்...

தியத்தலாவ நகரில் அமைந்துள்ள இராணுவ அக்கடமியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வெளிநாட்டு தூதர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐ.நா தலைமைச் செயலாளர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர் குழு அடங்கலாக சர்வதேச சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போர்ச் சம்பவங்கள் குறித்து கவனம் செலுத்தியுள்ளனர்.

இதன்போது கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கை தொடர்பில் தவறான தகவல்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

எனவே இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை அரசுக்கு இருந்தபடியால்தான் அரசாங்கத்தின் சனத்தொகை புள்ளி விபரத் துறை,வடமாகாணத்தில் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை கணக்கெடுத்துள்ளது.

இதன்படி கணக்கிட்டு பார்த்தபொழுது தான் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை எண்ணாயிரத்துக்குக் குறைவாக உள்ளது. இவர்களில் விடுதலைப் புலிகளும், அவர்களால் கொல்லப்பட்ட பொது மக்களும் போரின் இடையில் சிக்கிக் கொண்டவர்களும் அடக்கம் என்றும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இறுதிக்கட்டப் போர் தொடங்கிய போது கிட்டத்தட்ட 25 ஆயிரம் விடுதலைப் புலிகள் இருந்தார்கள். அவர்களில் 12 ஆயிரம்பேர் வரையில் படையினரிடம் சரணடைந்து விட்டார்கள். இதன்படி கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் சடலங்களின் எண்ணிக்கையை வைத்துப்பார்த்தால் கிட்டத்தட்ட 4600 போராளிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் போராடுவதற்காக விடுதலைப் புலிகளால் நிர்ப்பந்திக்கப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

காணாமல் போனவர்களை கண்டு பிடிப்பதற்காக அரசு யுனிசெப்பின் உதவியுடன் வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருப்பதாகவும் வயது வந்தவர்கள் 1,888 பேரையும், சிறார்கள் 676 பேரையும் கண்டுபிடித்துத் தருமாறு குடும்பங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளதாகவும், காணாமல் போயுள்ள 64 வீதமான சிறார்கள் விடுதலைப் புலிகளால் படையில் சேர்க்கப்பட்டவர்கள் தான் என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை படையினரின் நடவடிக்கைகளால் கொல்லப்பட்டவர்கள் எத்தனைபேர்? காணாமல் போனவர்கள் எத்தனைபேர்? என்று எழுகின்ற குற்றச்சாட்டுக்கள் மற்றும் கேள்விகளுக்கான பதில்களை தரக்கூடிய புள்ளிவிபரங்களை கோத்தபாய ராஜபக்ஷ இங்கு தெளிவாக முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8-11)

## கூட்டமைப்பு-மு...

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் அண்மையில் இரு தடவைகள் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ள போதிலும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் இருந்து இதுவரை பதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கம் வகித்தாலும், கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்தா? அல்லது கூட்டாகவா? போட்டியிடப் போகின்றது என்பது தொடர்பில் இதுரை எந்தவொரு முடிவையும் அக்கட்சி அறிவிக்கவில்லை.

இந்நிலையில், வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பாலான தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்டிருப்பது போல, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெரும்பாலான முஸ்லிம் மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சி என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் பி.பி.சி. தமிழோசைக்கு தெரிவித்துள்ளார்.

இணைந்த வடக்குக் கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களுக்குமான அதிகாரப் பகிர்வை ஏற்றுக் கொண்டுள்ள கட்சி என்பதனாலேயே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் தமது கட்சி இணக்கப்பாட்டை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ந-8-11)

## நான் இன்னும்...

இராணுவத்தில் இருந்தபோது அரசியலில் ஈடுபட்டேன் என்று என் மீது பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அதற்கு எதிராக மேன்முறையீட்டு செய்யவே இன்று(நேற்று) நீதிமன்றம் வந்துள்ளோம்.

நியாயம்,தர்மம் மற்றும் நீதிமன்ற சுயாதீனத்துவம் ஆகியவற்றின் மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். அதனால் எமக்கான நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மோசடிகள், கொடுமைகள், கொலைகளுக்கு பின்னால் இந்த அரசாங்கத்தின் கீழ் மட்டத்திலுள்ள அரசியல்வாதிகளே காணப்படுகின்றனர்.

காவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற தாய்,மகள் படுகொலை, தங்காலையில் வெளிநாட்டவர் கொல்லப்பட்டமையும் பெண்ணொருவர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமையும்,அக்குரஸ்ஸ மற்றும் கட்டுவன ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுக்கு பின்னால் மேற்படி அரசாங்கத்தின் கீழ் மட்ட அரசியல்வாதிகளே காணப்படுகின்றனர்.

இவர்களுக்கான உரிய தண்டனைகள் கிடைக்கப்ப பெறாதா என்பதே பொது மக்களின் கேள்வியாக இருக்கிறது. இவர்களை இந்த அரசாங்கம் எப்படியாவது காப்பாற்றிக் கொள்கிறது.

இவ்வாறான நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க எதிர்காலத்தில் நாம் போராடுவோம். எமது போராட்டங்களின் மூலம் இந்த அசாதாரணமான நிலைமைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்போம். அதற்கு பொது மக்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இராணுவ நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய எனக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. எனக்கான ஜெனரல் பதவியும் ஓய்வூதியமுமே இந்த நீதிமன்றத்தின் மூலம் பறிக்கப்பட்டது. என்னை சிறையிலிருந்து விடுவிக்க ஜனாதிபதி முற்பட்டதாக மக்களுக்கு தெரியும் வகையில் என்னை விடுதலை செய்துள்ளனர்.

இருப்பினும் என்னுடைய ஜனநாயக உரிமைகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. அந்த வகையில் நான் இன்னமும் சிறைக் கைதியாகவே உள்ளேன் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (ந-8-11)


**மின் உபகரணங்கள் திருத்துதல்**

TV, Fridge, Washing Machine, Fan மற்றும் வீட்டு மின் உபகரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டிற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயறிங் திருத்த வேலைகளும் பாத்றூம் கொமேட் திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

TP:- 0778000748
(8789)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.